# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம்

வெள்ளி, ஒக்டோபர் 12, 2018. இதழ் - 34



போருக்கு பின்னரான காலத்தில்

'மாற்றுக்கால நீதி'

அதன் சாத்தியங்களும் தடைகளும்

கலந்துரையாடல் நிகழ்வு....

சாள்ஸ் அன்டனிதாஸ் (லண்டன்)


(ஆய்வாளர் மற்றும் சமூகச்செயற்பாட்டாளர்)

ஆர்வமுள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

13.10.2018(சனிக்கிழமை) காலை 9.30 மணிக்கு....

அரங்கம் கேட்போர் கூடம், 227, பார் வீதி, மட்டக்களப்பு


ஏற்பாடு அரங்கம் செய்திகள் - 'கா' கலை இலக்கியவட்டம்

**மட்டக்களப்பு மாநகர சபை தொடர்பான வாசகர் விமர்சனம் மற்றும் ஆலோசனை**

மாநகர சபையின் கழிவு அகற்றுதல் தொடர்பான பிரச்சினைக்கியமானது.

பக்கம் - 09



**மீள்குடியேற்றக் கிராமங்களின் கதை**

வெலிக்கந்தையில் இறங்கிய போது மாலை ஐந்து மணியாகி விட்டிருந்தது.

பக்கம் - 03



**தரம் 5 பரீட்சை குழந்தைகளுக்கு வரமா, சாபமா?**

'பிள்ளைகளை வாட்டி வதைப்பதுதான் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

பக்கம் - 04



**கலித்தொகை இன்பம்**

விதை விதைத்தல், அருவிவெட்டுதல், ஆடுமாடு மேய்த்தல் என்று ஒடியோடி உழைத்துப்

பக்கம் - 12



## 'அரசியல் கைதிகள் விடுதலை விவகாரத்தில் அரசியல் யதார்த்தங்களை புரிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்'

--- அமைச்சர் மனோ கணேசன்

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்த விவகாரத்தில் அரசியல் யாதார்த்தங்களை கருத்தில் கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுக்காவிட்டால், அந்த விடயத்திலும் நாம் தோற்றுவிடும் நிலை ஏற்படலாம் என்று அமைச்சர் மனோ கணேசன் எச்சரித்துள்ளார்.

தான் ஒரு அமைச்சராக இருக்கின்ற போதிலும், அரசியல் கைதிகள் விடயத்தில் அமைச்சரவைக்குள்ளும் வெளியேயும் கடுமையான முயற்சிகளை எடுத்து வருவதாக கூறும் அவர், இந்த விடயத்தில் முழுமையான வெற்றியை பெறுவதற்கு முயற்சிசெய்தாகவும் குறிப்பிட்டார்.

அவர் இது குறித்து அரங்கம் செய்திகள் பத்திரிகையுடன் பேசிய விடயங்கள் பின்வருமாறு.

'அரசியல் கைதிகள் விடுதலையுடன் சேர்த்து இராணுவத்தில் குற்றம் செய்தவர்களுக்கும் பொதுமன்னிப்பு வழங்கும் ஒரு திட்டத்தை அமைச்சர் சம்பிக ரணவக்க முன்வைத்திருக்கின்றார்.

போர்க்குற்றம் செய்த இராணுவத்தினருக்கு பொதுமன்னிப்பு அளிப்பதில் எனக்கும் உடன்பாடு கிடையாது. ஆனால், ஒரே போரில் சம்பந்தப்பட்ட இருதரப்பினரின் விடுதலைக்கான ஒரு திட்டத்தை ஒருவர் பரிந்துரைக்கும் போது, நாம் அவற்றை, நமது தரப்பினரின் நலன் கருதி, ஒரு ஆரம்பப்புள்ளியாகவேனும் வைத்து, பேச்சு நடத்த முன்வரவேண்டும்.

எமக்கு கதாநயகர்களாக தெரிபவர்கள் எவ்வாறு சிங்கள தரப்புக்கு பயங்கரவாதியாக தெரிவாரோ, அதேபோல எமக்கு பயங்கரவாதிகளாக தெரிபவர்கள் அவர்களின் தரப்புக்கு கதாநாயகர்களாக தெரிவார்கள்.

ஆகவே எமது அரசியல் கைதிகளின் விடுதலைக்கான ஒரு திட்டம் மறுதரப்பிடம் இருந்து வரும் போது அதனை ஆராய்ந்துபார்க்க நாம் தயாராக இருக்க வேண்டும்.

வரும் திட்டங்கள் அனைத்தையும் நிராகரித்த போக்கே கடந்த காலத்தில் எமது பல அரசியல் தோல்விகளுக்கு முக்கிய காரணமாக இருந்திருக்கிறது என்பதனையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

தொடர்ச்சி... (பக்கம் -02 )

## கல்முனைப் பகுதியில் பாரிய கடலரிப்பு: கடலோர மரங்கள் இருக்கைகள் கிணறுகள் கடலுக்குள் சங்கமம்!

(காரைதீவு நிருபர் சகா)

கல்முனைப் பிரதேசத்தில் பாரிய கடலரிப்பு இடம்பெற்றுவருகின்றது. கடந்த சில தினங்களாக கடல் சீற்றம்கொண்டு பாரிய சத்தத்துடன் அலைகளை வெளித்தள்ளிவருகிறது.

இதனால் கல்முனை பாண்டிருப்பு மருதமுனை நீலாவணை போன்ற பிரதேச கடலோரங்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுவருகின்றன. மக்கள் அச்சத்துடன் காணப்படுகின்றனர்.



கடலரிப்பைத் தடுப்பதற்கென சுனாமிக்குப்பின் நடப்பட்டிருந்த சவுக்கு மரங்கள் கடலுக்குள் இழுத்துச்செல்லப்பட்டுள்ளன. சில தென்னைமரங்களும் இவ்விதம் உள்வாங்கப்பட்டுள்ளன.

கடலோரத்தில் மக்கள் இருப்பதற்கென அமைக்கப்பட்டிருந்த சீமெந்து இருக்கைகள் பல கடலுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளன. சில மண் வார்த்து மூடப்பட்டுள்ளன.

தொடர்ச்சி... (பக்கம் -02 )


NIRUTHA

Main Road, Kommathurai, Chenkalady, Sri Lanka.

Tel: +94652054444
Fax:+94652054092

UK Hotline: +447850927964

E-mail: info@hotelnirutha.com

Visit: www.hotelniruthu.com

Hotline: +94 717 412 292

அரங்கம் செய்திகளுக்கான ஆதரவில் கைகோர்ப்போம்' - ஹொட்டல் நிருத்தா

முதலாம் வகுப்பிற்கு பிள்ளையை சேர்ப்பதில்

அநீதி இழைக்கப்பட்டதா?

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

நேர்மையின் புகலிடம்

இல: 5/1, எல்பேங்க் வீதி, கொழும்பு - 05

Email: tisl@tisrilanka.org Web: www.tisrilanka.org

இலவச சட்ட ஆலோசனை பெற அழையுங்கள்

011 2 501 503

மாத்தறை - 041 22 33 522 - வவுனியா - 024 222 76 76

## பாதையில் முதலைகளின் நடமாட்டம் அதிகரிப்பு: மக்கள் அச்சம்



(காரைதீவு நிருபர் சகா)

அம்பாறை - காரைதீவு பிரதான வீதி மாவடிப்பள்ளியை ஊடறுத்து செல்லும் ஆற்றில் அதிகளவிலான முதலைகள் காணப்படுவதால் மக்கள் அந்தப் பாதையில் செல்வதற்கு அச்சப்படுகின்றனர்.

அண்மையில் பெய்த மழை காரணமாக ஆற்றை விட்டு இரவிலும் பகலிலும் முதலைகள் வெளியேறுவதனால் வீதியால் செல்லும் பயணகள் மற்றும் பாதசாரிகள் அச்சத்துடனேயே பயணத்தை மேற்கொள்கின்றனர்.

குறிப்பாக இரவு நேரங்களில் அதிகமான சுமார் 9 அடி வரையிலான நீளமுடைய முதலைகள் நடமாடுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். மேலும் அம்பாறை மாவட்டத்தில் கிட்டங்கி, அன்னமலை, மாவடிப்பள்ளி, இறக்காமம், சின்ன முகத்துவாரம், சாகாமக்குளம், கஞ்சிகுடிச்சாறு, தாமரைக்குளம், பொத்துவில் களப்புக்கள் போன்ற இடங்களிலும் முதலை அச்சறுத்தல் தொடர்ந்து வருகின்றன.

மேற்படி பகுதிகளில் உள்ள வாவிகள் குளங்களிலும் முதலைகளின் பெருக்கம் அதிகரித்து காணப்படுகிறது.

அண்மையில் இலங்கைக்கு வந்த வெளிநாட்டு சுற்றுலாப்பயணி ஒருவர்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

## வவுணதீவு பிரதேச செயலகத்தில் சிறுவர்கள் முதியோர் கௌரவிப்பு

மண்முனை மேற்கு, வவுணதீவு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற சர்வதேச சிறுவர் தின நிகழ்வும் முதியோர் வார நிகழ்வும் வியாழக்கிழமை 11.10.2018 ஆம் திகதி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மண்முனை மேற்கு பிரதேசத்தில் சாதனை படைத்த மாணவர்களும், முதியோர்களும் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். இதன்போது சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் அதிதிகளின் உரையும் இடம்பெற்றது.

இப் பாராட்டு நிகழ்வில், அண்மையில் வெளியான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் மட்டக்களப்பு மாவட்டத்திலும், கிழக்கு மாகாணத்திலும் சிறந்த பெறுபேற்றினைப் பெற்று முதன் நிலைக்கு தெரிவான, மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேசத்திலுள்ள உன்னிச்சை 6ம் கட்டை பாடசாலை மாணவன் செல்வன் ஜெயராஜ் துஹின்

தொடர்ச்சி... (பக்கம் -05 )

## அரசியலமைப்பு சபைக்கான நியமனம்

அரசியலமைப்புச் சபைக்கான சிவில் சமூகப் பிரதிநிதிகள் மூவரின் நியமனத்தை நாடாளுமன்றம் அங்கீகரித்துள்ளது.

இதன் மூலம் புதிய அரசியலமைப்புச் சபைக்கான நியமனங்கள் பூர்த்தியடைகின்றன.

டாக்டர். ஜயந்த தனபால, அஹ்மட் யூசுப் மற்றும் நாகநாதன் செல்வக்குமாரன் ஆகியோர் சிவில் சமூக பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## நடுவானில் ரஷ்ய 'சோயுஸ்' ராக்கெட்டில் இருந்து வெளியேறிய விண்வெளி வீரர்கள்

சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு புறப்பட்ட ரஷ்யாவின் 'சோயுஸ்' ராக்கெட்டில் கோளாறு ஏற்பட்டதை அடுத்து அதில் இருந்து விண்வெளி வீரர்கள் அவசரமாக வெளியேறி தரையிறங்கினர்.

கஜகஸ்தானில் இருந்து புறப்பட்ட இந்த ராக்கெட்டில் ரஷ்ய விண்வெளி வீரர் அலெக்சி ஓவ்சினின் மற்றும் அமெரிக்க விண்வெளி வீரர் நிக் ஹேக் ஆகியோர் பயணம் செய்தனர். ஏவப்பட்டபோது, ராக்கெட்டின் பூஸ்டரில் கோளாறு ஏற்பட்டதாகவும், அதில் உள்ள விண்வெளி வீரர்கள் அதில் இருந்து பேலிஸ்டிக் இறங்கு வாகனம் மூலம் புவிக்குத் திரும்பியதாகவும் அமெரிக்க விண்வெளி நிறுவனம் 'நாசா' தெரிவித்துள்ளது.

## தீப்பள்ளம் அருகே பணிசெய்தவர் மயங்கி வீழ்ந்து மரணம்:

தீமிதிப்பு நிகழ்விற்காக தீக்குழியை தயார் செய்துகொண்டிருக்கையில் மயங்கிவீழ்ந்த பக்தர் பின்னர் மரணமானார்.

இச்சம்பவம் சம்மாந்துறை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த தீமிதிப்பு வைபவத்தின்போது இடம்பெற்றது.

கடந்த புதன்கிழமை காலை 7 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

மரணமானவர் பாண்டிருப்பைச் சேர்ந்த 62 வயதான அருளாநந்தம் கண்ணதாசன் எனும் பக்தராவார்.

தீக்குழியை தீமிதிப்பு நிகழ்விற்காக தயார் செய்யும் பணியில் பல பக்தர்கள் ஈடுபட்டிருந்தனர். இவரும் தீக்குழியருகே அமர்ந்து அந்தப்பணியில் ஈடுபட்டிருக்கும்போது மயக்கமடைந்து வீழ்ந்தார். அத்தருணம் தீமிதிப்பு ஆரம்பித்திருக்கவில்லை.

(காரைதீவு நிருபர் சகா)

## ‘ குரு பிரதீபா பிரபா‘ தேசியவிருது





மட்டக்களப்பு கல்வி வலயத்தை சேர்ந்த மட்/திருப்பெருந்துறை ஸ்ரீமுருகன் வித்தியாலய அதிபர் திரு.சோமசுந்தரம் தர்மசீலன் அவர்கட்கும் மட்/அமிர்தகளி ஸ்ரீசித்திவிநாயகர் ம.வி அதிபர் திருமதி நவகீத்தா தர்மசீலன் அவர்கட்கும் உலக ஆசிரியர் தினத்தன்று ( 2018-10-05 ) கல்வி அமைச்சின் வழிகாட்டலில் BMICHல் " குரு பிரதீபா பிரபா" தேசியவிருது கௌரவ கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் அவர்களினால் வழங்கப்பட்டு, கௌரவிக்கப்பட்டது.

இவ் விருதானது இவர்கள் தங்கள் பாடசாலையில் மேற்கொண்ட அர்ப்பணிப்பான அதிபர் சேவைக்கே வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி...

## ‘அரசியல் கைதிகள் விடுதலை விவகாரத்தில் அரசியல் யதார்த்தங்களை புரிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்’

சம்பிக்க ரணவக்க அவர்கள் அரசாங்கத்தின் சார்பில் இந்த பரிந்துரையைச் செய்யவில்லை. ஒரு சிங்கள பௌத்த தேசியவாதியாகவே அவர் இந்த கருத்தை முன்வைத்துள்ளார். ஆகவே அதனை சிங்கள பௌத்த தேசியவாதிகளின் கருத்தாகக் கொண்டு அவர்களுடன் பேச முயல வேண்டும். அதில் இருந்து எமது அரசியல் கைதிகளின் விடுதலையை உறுதி செய்ய முயல வேண்டும்.

நான் ஒன்றும் போர்க்குற்றம் செய்த இராணுவத்தினருக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட வேண்டும் என்ற கருத்துக்கு ஆதரவானவன் அல்ல. ஆனால், அனைத்தையும் நிராகரிப்பதன் மூலம் எமது மக்கள் பாதிக்கப்படுவதை, நாம் அரசியல் ரீதியாக தோற்பதை ஏற்க முடியாதவன்.

இது குறித்து என்னுடன் பேசிய அமைச்சர் ரணவக்க, தானும் கூட அனைத்து இராணுவத்தினரையும் விடுதலை செய்வதில் அக்கறை இல்லாதவர் என்றும், ஆட்கடத்தல்கள் போன்ற தனிப்பட்ட குற்றங்களைச் செய்தவர்களை விடுவிப்பதில் தனக்கும் உடன்பாடு கிடையாது என்றும் கூறினார். அந்த வகையில் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான அனைத்து முன்வைப்புக்களையும் ஒரு ஆரம்ப புள்ளியாகக் கொண்டாவது நாம் பேச்சு நடத்த முன்வரவேண்டும்’ என்றார் அமைச்சர் மனோ கணேசன்.

## இலங்கை மாணவர் கல்வி நிதிய பொதுக்கூட்டம்



இலங்கையில் நீடித்த போர் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு, 1988 ஆம் ஆண்டு முதல் அவுஸ்திரேலியாவிலிருந்து உதவிவரும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் முப்பதாவது ஆண்டு நிறைவு நிகழ்வும், வருடாந்த ஆண்டுப்பொதுக்கூட்டமும் இம்மாதம் 27 ஆம் திகதி ( 27-10-2018) சனிக்கிழமை மாலை 5.00 மணி முதல் இரவு 8.00 மணிவரையில் மெல்பனில் வேர்மண் தெற்கு சனசமூக நிலையத்தில் (Vermont South Community House - Karobran Drive, Vermont South VIC 3133) நிதியத்தின் தலைவர் திரு. விமல் அரவிந்தன் தலைமையில் நடைபெறும்.

இதுவரையில் நூற்றுக்கணக்கான அன்பர்களின் ஆதரவுடன் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு உதவிய கல்வி நிதியத்தின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பான செயல் அமர்வும், மாணவர்களின் முன்னேற்றம் பற்றிய தகவல் அமர்வும் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு நிதியத்தின் உறுப்பினர்களையும், மாணவர்களுக்கு உதவ விரும்பும் அன்பர்களையும் அன்புடன் அழைக்கிறது இலங்கை மாணவர் கல்வி நிதியம்.

மேலதிக விபரங்களுக்கு:
விமல் அரவிந்தன்
(தலைவர்) 04 144 46 796

வித்தியா ஸ்ரீஸ்கந்தராஜா
(நிதிச்செயலாளர்) 04 048 08 250

முருகபூபதி
( துணை நிதிச்செயலாளர்) 04 166 25 766

தொடர்ச்சி...

## கல்முனைப் பகுதியில் பாரிய கடலரிப்பு: கடலோர மரங்கள் இருக்கைகள் கிணறுகள் கடலுக்குள் சங்கமம்!

கடலோரக்குடியிருப்புக்களுக்கென கட்டப்பட்டிருந்த சில கிணறுகளும் கடலினுள் அமிழ்ந்துள்ளன. சில அரைகுறையாக தெரிகின்றன.

ஒலுவில் துறைமுக நிர்மாணத்தால் ஏற்பட்ட விளைவுதான் இந்த பாரிய கடலரிப்பு என பொதுமக்கள் கூறுகின்றனர். இப்பிரதேசத்தில் பாரிய கற்களையிட்டு அணைபோட வேண்டும். இன்றேல் கடல் ஊருக்குள் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என அவர்கள் கூறுகின்றனர். சம்பந்தப்பட்ட தரப்பினர் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென அவாகள் மேலும் கோரிக்கைவிடுக்கின்றனர். அண்மையில் திருக்கோவில் பிரதேசத்திலும் இவ்விதம் பாரிய கடலரிப்பு இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மீள்குடியேற்றக் கிராமங்களின் கதை

## வடமுனையும் ஊத்துச்சேனையும்

**உள்ளே மக்கள் வெளியே யானைகள்**

வெலிக்கந்தையில் இறங்கியபோது மாலை ஐந்து மணியாகி விட்டிருந்தது. வெலிக்கந்தை சிறிய நகரமாயினும் காபெட் வீதிகளும் கட்டடங்களுமாகக் காட்சி தருகிற சிறுநகரம்.

சந்தியிலிருந்து சிங்களக் கிராமத்திற்கு செல்லும் அழகிய காபெட் வீதிக்கு எதிரே, குண்டும் குழியுமான கிறவல் வீதியில் 7/8 கிலோமீற்றர் செல்ல வேண்டும் வடமுனைக்கு!

அதிலிருந்து சிறு தூரத்தில்தான் ஊத்துச்சேனைக் கிராமம்.

ஊத்துச்சேனையில் நடைபெறும் சிறுவர் தின - முதியோர் தின நிகழ்வுகளுக்குச் செல்லுவதற்கான பயணத்தில் இந்தச் சந்தியில் நின்று கொண்டிருந்தோம்.

வடமுனை, ஊத்துச்சேனை என்பன எல்லையோரக் கிராமங்கள். 1980 களில் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் பெயரில் ஒரே நாளில் ஆயிரக்கணக்கான சிங்களக் குடியேற்ற வாசிகளைக் கொண்டு வந்து குடியேற்ற முயற்சித்த போது பிரபல்யமான கிராமங்கள் இவை.

வடமுனைக் குளமும் வளமான மண்ணும் கடிமான உழைப்பும் ஒன்று சேர செழிப்பான கிராமங்களாக அவை அப்போதிருந்தன. மா, பலா, தென்னஞ்சோலைகள் என வளமும் வனப்பும் மிகுந்த கிராமங்களாக இருந்தன. பாலும் தேனும் அங்குதான் சுவையாக இருக்கும். வேட்டையாடுவேரின் சொர்க்க புரியும் கூட. ஆயுதப் போராட்டம் தொடங்கிய பின்னர் இரண்டு முறை, நீண்ட காலம் இடம் பெயர்ந்து இப்போது மீளக்குடியேறியிருக்கிறார்கள். எங்களை அழைத்துச் செல்லும் முச்சக்கரவண்டி வந்து, நாங்கள் அதில் ஏறியபோது 5.30 மணியாகிவிட்டது. “7/8 கிலோ மீற்றர்தான் என்றாலும் குண்டும் குழியுமான வீதியல் செல்ல சற்று நேரம் பிடிக்கும். மழை மூட்டம் வேறு. யானைகள் வீதிக்கு வந்து விடும். கவனமாகப் போகவேண்டும்.' என்று பயமுறுத்தினார் முச்சக்கர வண்டிச்சாரதி. கடும் நெருக்கடிகளில் கூட இப்பாதையில் செல்லும் துணிச்சல் மிக்கவர் எனக்கூறப்பட்டதால்தான் இந்த நேரத்தில் அவருடன் பயணம் செய்யத் துணிந்தோம். அவரே இப்படிக் கூறினால்? இந்தக் காட்டுக்குள் யானைகளில் அடிபட்டுச் சாக யாருக்குத்தான் விருப்பம் வரும்.

வீதியின் இருபக்கங்களிலும் காடுகள். வீதியும் வீதியில் யானை வரும் இடங்களும் அவருக்கு அத்துப்படி. 'இது யானைகள் கடக்கும் இடம். கடக்கும் போது நாம் குறுக்கறுக்கக் கூடாது. அத அது பாட்டுக்குப் போகவிட்டால் சரி.”எனக் கூறிக்கொண்டும் காடுகளைப் அவதானமாகப் பார்த்துக் கொண்டும் மெதுவாகவே வண்டியை ஓட்டிச் சென்றார். முச்சக்கர வண்டி மெதுவாகத்தான் சென்றது என்றால் அது கொஞ்சம் புனைவுதான். மிகமிக மெதுவாகவே சென்றது வண்டி.

மனதுள் ஓடிய பயத்தினைப் போக்க சத்தமாகப் பேசிக்கொண்டு சென்றோம். அரை மணி நேரப் பயத்தின் பின் கள்ளிச்சை என்ற பெயர்ப்பலகையும் ஒரு கிறவல் வீதியும் தென்பட்டது. அதுவும் மீள்குடியேற்றக் கிராமம்தான். இன்னும் கொஞ்சத்தூரத்தில், காடுகளுக் கூடாக சில வீடுகள் தெரிந்த போதுதான் நிம்மதி ஏற்பட்டது. அது எல்.பி. கிராமம். எல்.பி கிராமத்தைத் தாண்டிய போது வடமுனைக் குளம் விசாலமாகத் தெரிந்தது. மாலைமங்கிய வெளிச்சத்தில் மனோரம்மியமாகக் காட்சியளித்தது குளம்.

வடமுனைக்கிராமத்திற்குள் நுழைந்து ஊத்துச்சேனைக்கு திரும்பியபோது இருட்டத் தொடங்கிவிட்டிருந்தது. இருளில் பெரிய உருவத்தில் யானை ஒன்று நிற்பது தெரிந்தது. வயல் வெட்டைக்குள் யானை ஒன்று இறங்கிவிட்டிருந்தது. நாங்கள் ஊருக்குள் போகும் போது யானைகளும் ஊர் எல்லைக்குள் போய் விட்டிருந்தன. பட்டாசு வெடிச்சத்தமும் கூய் கூய் என யானைகளை விரட்டும் சத்தங்களும் கேட்டுக் கொண்டிருந்தன.

முன்னர் சண்டை நடந்த காலத்தில் மாலையானதும் மக்கள் வீட்டுக்கள் முடங்கிக் கிடக்கும் நிலைமை இருந்தது. அது ஆமிக்குப் பயத்தினால். இப்போது யானைகள் மக்களை முடக்கி வைத்திருக்கின்றன. ஊருக்குள் புகும் யானைகளால் ஊருக்குள்ளேயே மனிதர்கள் நடமாட முடியாத நிலைமை உருவாகியிருக்கிறது! ஆனாலும் என்ன,



ஊர் எல்லையில் நின்ற யானைகளைப் பற்றி யாரும் பெரிதாக அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை. நாங்கள் தங்கியிருந்த இடத்திற்கும் இரண்டு நாட்களுக்கு முன் யானை வந்திருந்தது. யானைகள் வந்தாலும் ஒன்றும் செய்வதில்லை என்றார்கள்.

மறுநாள் ஊரைப் பார்க்கப் புறப்பட்டோம். நீண்ட கால இடப்பெயர்வுகள் கிராமங்களின் செழிப்பையும் வனப்பையும் துடைத்தழித்திருந்தன. 1990 இல் இடம் பெயர்ந்து 13 ஆண்டுகள் பல ஊர்களுக்கு இடம் பெயர்ந்து, இடம் பெயர்ந்து, 2003 இல் மீண்டும் வந்து குடியேறிய போதிலும், யுத்தம் அவர்களை நிம்மதியா வாழவிடவில்லை. மீண்டும் 2006 இல் இடம்பெயர வேண்டி ஏற்பட்டது. 2009 இல் கொஞ்சப் பேர் மீண்டும் வந்து குடியேறியிருக்கிறார்கள். இடம்பெயர்ந்து வாழ்ந்த இடங்களில் சிலர் நிரந்தரமாகவே வாழத்தொடங்கிவிட்டார்கள்.

**கிரான் விஜய்**

வடமுனைக் குளம் பெரிய குளங்களில் ஒன்று. ஆனால் அதன் நீர்ப்பாசனத்தைக் கொண்டு பெரியளவில் நெற்செய்கை விருத்தியடைவில்லை என்றார்கள். இன்றைய நெற்செய்கையும் இயந்திரப் பாவனையுடன் நடைபெறுகிறது. புல்லு செருக்குதல், வரம்பு கட்டுதல், அருவி வெட்டுதல் என்ற வாழ்வதாரத் தொழில்கள் இல்லாமல் போயுள்ளன. அதனால் கிடைக்கும் வருமானமும் நெல்லும் இப்போது கிடைப்பதில்லை. குளத்து மீனும் மீன்பிடியும் வருடம் முழுவதற்குமான ஆதாரமாக விளங்குகின்றன. இது மீள்குடியேற்றக் கிராமங்களின் பொதுக்காட்சி.

குடியேறியவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. மின்சாரமும் கிடைத்திருக்கிறது. ஆனால் இது அவர்களுடைய வாழ்வாதாரத்தை வளப்படுத்த உதவியதாகத் தெரியவில்லை என்பது சங்கடமானதொரு விடயம்தான். மின்சாரம் கிடைத்திருப்பது செல்லிடத் தொலைபேசிப் பாவனைக்கு வாய்ப்பாக அமைந்திருக்கிறது. தொலைக்காட்சிப் பாவனைக்கும் வாய்ப்பாக அமைந்திருக்கிறது. இரண்டுமே செலவைத் தரும் விடயங்கள் தான்!

சிலர் மாடும் ஆடும் வளர்க்கிறார்கள். அது நாட்டு வளர்ப்பு முறை. பாரம்பரியமாக நடைபெற்று வருவன. வீட்டுத் தேவைக்குப் போக மிகுதியை விற்றுக் கொஞ்சம் பணம் பார்த்துக் கொள்ளலாம். அவ்வளவுதான்.

பொது நீர் வசதிகள் கிடைத்திருக்கின்றன. அதைக்கொண்டு காலை, மாலைக் கடன்களை முடித்துக் கொள்ளலாம். குடிநீரையும் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் பயிர் செய்ய முடியாது! நிலத்தடி நீரைப் பெற்றுப் பயிர் செய்வதற்கு பல லட்சம் ரூபாய்களில் செலவு ஏற்படும். மாரி மழையை நம்பிய சேனைப் பயிர்ச்செய்கைதான் சாத்தியமாகிறது.

மீள்குடியேற்றக் கிராமங்களில் இன்றைய நிலையில் கீரையும் இல்லை, கோழியும் இல்லை, கோழி முட்டையும் இல்லை என்பது கிராமங்கள் பற்றிய மனப்பதிவையே மாற்றியமைத்து விடுகின்றன. பாடசாலைச் சத்துணவுத் திட்டத்திற்கான முட்டை வாங்க ஒட்டமாவடிக்கோ அல்லது வாழைச்சேனைக்கோ செல்ல வேண்டியிருக்கிறது என பாடசாலை அதிபர் கூறியது கவலை தரும் செய்திதான். அங்கேயும் குளியாப்பிட்டியிலிருந்து வருகிற முட்டைதான் விற்கிறார்கள். குருநாகலில் இருந்து வருகிற கோழியைத்தான் விற்கிறார்கள்.

கடின உழைப்பும் வாழ வேண்டும் என்ற எண்ணமும் இக் கிராமங்களில் உயிர்ப்பை மீண்டும் துளிர்விடச் செய்திருக்கிறது. தென்னை, பலாக்கள் இப்போதுதான் வளரத்தொடங்கியிருக்கின்றன. அவை வளர்ந்து செல்லும். மண்ணும் உழைப்பும் அப்படி.

# 'கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு' - புதிய அரசியல் கூட்டு ஆரம்பம்

கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி, தமிழர் சமூக ஜனநாயகக்கட்சி, அகில இலங்கை தமிழர் மகா சபை ஆகிய ஐந்து தமிழ் அரசியல் கட்சிகளும் 05.10.2010 அன்று ஒன்று கூடி 'கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு' எனும் பெயரில் புதிய அரசியல் கூட்டணியொன்றை உருவாக்கியுள்ளன.

எதிர்வரும் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் கிழக்கு மாகாணத் தமிழர்களின் சார்பில் அதி உச்சபட்ச உறுப்பினர்களைப் பெற்றுக் கொள்ளும் வகையில் அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளையும் ஒரு பொதுச் சின்னத்தின் கீழ், ஓரணியில் போட்டியிட வைப்பதற்காகத் தாம் எடுத்துக் கொண்ட முயற்சியின் ஒரு முக்கிய கட்டமாக இந்த அரசியல் கூட்டணி உருவாகியுள்ளதாக கிழக்குத் தமிழர் ஒன்றியம் கூறியுள்ளது.

இந்த முயற்சியின் முதற்கட்டமாக அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளையும் கிழக்குத் தமிழர் ஒன்றியம் தனித்தனியே சந்தித்துப் பேசியது. பின்னர், அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளையும் ஓரிடத்தில் கூட்டிக் கலந்துரையாடியது. அங்கு எட்டப்பெற்ற தீர்மானத்திற்கமைய கிழக்குத் தமிழர் ஒன்றியம் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைத் தயாரித்து, அதன் நகல் வடிவத்தினை அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளினதும் பார்வைக்கு அனுப்பி வைத்து அவற்றின் பின்னூட்டல்களைக் கோரியிருந்தது. இந்தப் பின்னணியிலேயே தங்கள் சம்மதத்தைத் தெரிவித்த மேற்படி ஐந்து கட்சிகளும் கொழும்பில் ஒன்றுகூடி புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் உள்ளடக்கத்தினையிட்டு விரிவாகக் கலந்துரையாடி அதன் நகல் வடிவத்தில் அவசியமான திருத்தங்களை மேற்கொண்டு புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை இறுதிப்படுத்தியுள்ளன.

எனினும் இதுவரை தங்கள் சம்மதத்தைத் தெரிவிக்காத தமிழ் அரசியல் கட்சிகளான இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம் ஆகிய ஐந்து கட்சிகளுக்கும் தங்கள் நிலைப்பாடுகளைத் தெரிவிக்க நல்லெண்ண அடிப்படையில் 17.10.2018 வரை கால அவகாசம் வழங்கும் கடிதங்களைக் கிழக்குத் தமிழர் ஒன்றியம் அனுப்பி வைத்துள்ளது.

மேலும், தேர்தல் திணைக்களத்தினால் இதுவரை அங்கீகரிக்கப்படாத ஆனால் தமிழ் மக்களிடையே அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி, ஈரோஸ் ஜனநாயக முன்னணி, ஜனநாயகப் போராளிகள் கட்சி, புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளிகள் கட்சி என்பன கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் அரசியல் செயற்பாட்டிற்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளதாகவும் கிழக்கு தமிழர் ஒன்றியம் கூறியுள்ளது.

அத்துடன், இதுவரை தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படாத தமிழ் அரசியல் கட்சிகளுடனும் தேசியக் கட்சிகளில் இணைந்து அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள தனிநபர்களுடனும் மிகவிரைவில் நல்லெண்ணப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ளதாக கிழக்குத் தமிழர் ஒன்றியம் கூறுகின்றது.

எது எப்படியிருப்பினும் குறிப்பிட்ட காலச் சட்டகத்திற்குள் 'கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு' எனும் புதிய இவ் அரசியல் கூட்டணியை தேர்தல் திணைக்களம் அங்கீகரித்து அதற்கெனப் புதிய சின்னம் ஒன்றினைப் பெற்றுக் கொள்ளும் செயற்பாடுகளைத் துரிதப்படுத்த வேண்டியுள்ளதால் எதிர்வரும் 20.10.2018

# தரம் 5 பரீட்சை குழந்தைகளுக்கு வரமா, சாபமா?

## பாராட்டுபவர்களை பாராட்டாமல் இருக்க முடியவில்லை



# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்



'பிள்ளைகளை வாட்டி வதைப்பதுதான் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, இதில் மாவட்ட வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெறுபவர்கள் எல்லோரும் பல்கலைக்கழகம் செல்வதில்லை. ஆனாலும் பிள்ளைகளின் மகிழ்ச்சிக்கு இடமில்லை' என மாதவனும், சின்னராசாவும் உன்னிச்சைக்குளத்து அணைக்கட்டில் இருந்து பேசிக்கொண்டிருந்தனர்.

பிஞ்சுகளை கொஞ்ச நேரமில்லாமல் வகுப்பறை கம்பிகளுக்குள் அடக்கி ஆனந்தத்தினை சூறையாடும் நிலை இலங்கை நாட்டில் இருக்கத்தான் செய்கின்றது. வசதியான பாடசாலை, வறுமையான மாணவர்களுக்கு புலமைப்பரிசில் என்பதனை கருவாகக்கொண்டு, தரம் 5 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் பரீட்சை ஆரம்பிக்கப்பட்டது. தற்கால சூழலில் பெற்றோரின் கௌரவப் பரீட்சையாக இதனை பெற்றோர்கள் மாற்றியுள்ளமையினால்

### படுவான் பாலகன்

பிள்ளைகளை ஓய்வின்றி ஓடவைத்து, மாவட்டவெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்றே ஆகவேண்டுமென்ற திணிப்பினையேற்படுத்தி, சிறார்களிடையே பயத்தினையும், சுமையையும் ஏற்றிவிடுகின்றனர். செய்வதறியாது பிள்ளைகளும் திணறி, பரீட்சையிலே தோற்றிவிடுகின்றனர். கூண்டுக்குள் அடைத்து வளர்த்த கிளியை திறந்துவிடும் போது, அக்கிளி மகிழ்ச்சி பொங்க சிறகுகளை அடித்துப் பறப்பதுபோன்று, பிள்ளைகளும் பரீட்சைக்கு தோற்றியபின் பேரானந்தத்தினை அடைகின்றனர். பெற்றார்கள், மாணவர்கள் தோற்றிய நாளிலிருந்து பரீட்சை பெறுபேற்றினை எதிர்பார்த்திருக்கின்றனர். பிள்ளைகள் அதனை மறந்து நிற்கின்ற நிலையில், பரீட்சை பெறுபேறு வெளியாகின்றது. இப்பரீட்சையில் 70புள்ளிகளுக்கு மேல் பெற்றால் மாணவர்கள் சித்தியடைந்துவிட்டனர் என்பதனை அந்த நிமிடத்தில் மறந்து, வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்ற பிள்ளைகள் மாத்திரமே சித்தியடைந்தவர்களென எல்லோரும் நினைக்கின்றனர். இச்சிந்தனையால் கூட்டாளியாகவிருந்த, கூடிவிளையாடிக்கொண்டிருந்த மாணவர்கள் உளரீதியாக நோகடிக்கப்படுகின்றனர். என்றான் சின்னராசு.

வெட்டுப்புள்ளிகள் பெற்ற மாணவர்களை நோக்கி பல கைகள் செல்கின்றன. ஏனைய மாணவர்களை நோக்கி கைகள் செல்லவில்லை. இத்தனையையும் பார்த்திருந்த பிள்ளைகள் அழுதுபுலம்புகின்றன. தனது நண்பர்கள் அழுகின்றனர் என்பதனை அவதானித்து வெட்டுப்புள்ளிகளுக்கு மேல்பெற்ற சிறுவர்களும் அழத்தொடங்குகின்றனர். பிள்ளைகள் என்னவென்று தெரியாமலே அழுகின்றனர். இவ்வழுகை உள ஆதங்கத்தின் வெளிப்பாடேயாகும். இதற்கு வகைகூறவேண்டியவர்கள் யார்? என்ற வினா ஒருபக்கமாகவிருக்க, இந்தவருடம் அண்மையில் தரம் 5 மாணவர்களின் புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகிருந்தன. இப்பெறுபேறு வெளியாகி மாவட்ட வெட்டுப்புள்ளிகள் வெளியான பின்பு, பல விமர்சனங்கள் முகநூல்களிலே குவிந்தன. பிள்ளைகளை அடக்கி வைக்கும் பரீட்சையெனவும், சாராசரியாக ஒரு பகுதியில் 80புள்ளிகள் வீதம் மொத்தமாக 160புள்ளிகளை பெற்றும் மாவட்டவெட்டுப்புள்ளியை அடைய முடியவில்லை. இவ்வாறான விடயங்கள் மிகவும் விமர்சனத்தினைக் கொண்டிருந்தன. ஆனாலும் குறிப்பிட்டளவிலான மாணவர்களுக்கே அரசாங்கம் புலமைப்பரிசிலை வழங்கும். இதில் அரசாங்க உத்தியோகத்தர்கள் உள்ளடங்கமாட்டார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் எழுவான்கரைப்பகுதியில் மாவட்ட வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெறுகின்றவர்கள் அரசாங்க உத்தியோகத்தில் உள்ள பெற்றோர்களின் பிள்ளைகளேயாவர். ஆனால் படுவான்கரைப்பிரதேசத்தில் அன்றாடம் கூலித்தொழில், விவசாயம் செய்து வாழ்கின்ற பெற்றோர்களின் பிள்ளைகளே மாவட்டவெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். இம்மாணவர்களுக்கு அரசினால் வழங்கப்படும் புலமைப்பரிசில் தொகை அவசியமானதே. இத்தொகைப் பணங்கள் இன்னும் பல மாணவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டியதும் அவசியமானதே.

கிழக்கு மாகாணம் கல்வி ரீதியாக பின்நிலையில் நிற்பதாக தரவுகள் சுட்டிநிற்கின்ற நிலையில், அரசினால் நடாத்தப்படுகின்ற பொதுப்பரீட்சைகளில் ஒன்றான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையிலும் மாணவர்கள் சிறந்தபெறுபேற்றினை பெற்றுகாண்பிக்க வேண்டியதும் அவசியமாகின்றது. ஏனெனில் மாகாணத்தின் பெறுபேற்றினை பார்வையிடுவதில் இம்மாகாணத்தினைச் சேர்ந்தவர்கள் ஆர்முள்ளவர்களாக இருக்கின்றனர். அதேபோன்றுதான் தமது வலயங்களும் முன்னிலை பெறவேண்டுமென்பதில் வலயத்தினை வழிநடத்தும் வலயக்கல்விப் பணிப்பாளர்கள் எண்ணுகின்றனர். இதனால் தமது வலயப்பெறுபேற்றினை உயர்த்துவதற்காக பல்வேறு வேலிகளுக்குள் பிள்ளைகளை அடைக்கவேண்டிய சூழலுக்குள் தள்ளப்படுகின்றனர் என்றே கூறவேண்டும். பெறுபேறுகள் வெளியாகின்ற போது தமது பிரதேசம் முன்னிலையில் நிற்க வேண்டும் என்பதனை சமூகத்தில் உள்ளோர்கள் விரும்புகின்றனர். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பில் விமர்சனங்கள் வெளிவந்திருக்கின்ற நிலையில், சாதிக்கப்பட்ட சாதனைகளை வெளியிடாமலும் இருக்கமுடியாது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் படுவான்கரைப்பகுதியினை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. இவ்வலயத்தில் கல்வி கற்று பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் வலய வரலாற்றில் வரலாற்று சாதனைகளை நிலைநாட்டியுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் முதலிடத்தினை பெற்ற மாணவன், இவ்வலயத்தில் உள்ள உன்னிச்சை 6ம்கட்டை அரசினர் தமிழ்கலவன் பாடசாலை மாணவனாவான். இம்மாணவன் தரம் 4ல் இருந்து இப்பாடசாலையில் கற்று தரம் 5ல் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்துள்ளான். இம்மாணவனின் வசிப்பிடம் மட்டக்களப்பு நகராகவிருந்தாலும் உன்னிச்சைப்பாடசாலையிலே இரு வருடங்கள் கற்றுள்ளான். இச்செயற்பாடு நகரைநோக்கி செல்பவர்களுக்கு முன்னுதாரணமாகவிருந்தாலும், நமது சமூகத்திலே சாதிக்கப்படாத பிரதேசங்களிலிருந்து சாதனைகள் வெளிவந்தால் அவற்றினை பாராட்டுவதென்பது மிகவும் குறைவானதே. அதற்கப்பால் விமர்சனங்களை கூறுவதே அதிகம் காணமுடிகின்றது. ஆனால், அதனையும் மீறி அவர்களை பாராட்ட "அறிவாலயம்" போன்ற அமைப்புக்களும் இருக்கத்தான் செய்கின்றன என்ற மாதவன், 196புள்ளிகளைப் பெற்று தேசிய ரீதியில் 4ம் இடத்தினைப் பெற்று சாதித்தமை வரலாற்று சாதனையேயாகும் என்றான்.

வலயத்தில் முதன்நிலை புள்ளியாக 196புள்ளிகள்விருக்கின்ற அதேவேளையில், இப்பிரதேசத்தினையைச் சேர்ந்த அம்பிளாந்துறை கனிஸ்ட வித்தியாலயத்தில் பயின்ற கோ.ஹவிநாத் என்ற மாணவன் 182புள்ளிகளைப் பெற்று வலயத்தில் இரண்டாம் இடத்தினைப்பிடித்துள்ளான். இதேபோன்று 181புள்ளிகளும் பல இடங்களில் பெறப்பட்டுள்ளன. மண்முனை தென்மேற்கு கோட்டத்திற்குட்பட்ட பண்டாரியாவெளி நாமகள் வித்தியாலயம், முனைக்காடு சாரதா வித்தியாலயம், கற்சேனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, படையாண்டவெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை போன்றன 100வீத சித்தியினை பெற்றுள்ளமை பெரிதும் பாராட்டுக்குரியது. மண்முனை மேற்கு கோட்டத்தில் முள்ளாமுனை முருகன் வித்தியாலயம், மண்டபத்தடி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, நரிப்புல்தோட்டம்; நடேஸ்வரா வித்தியாலயம் போன்றனவும் 100வீத சித்திகளைப் பெற்றிருக்கின்றன. ஏறாவூர்ப்பற்று மேற்கு கோட்டத்தில், உள்ள தளவாய் சுவாமி அஜராத்மானந்தாஜீ வித்தியாலயத்திலும், கொடுவாமடு சக்தி வித்தியாலயத்திலும் வலயம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்பு முதன்முறையாக ஒவ்வொரு மாணவர்கள்வீதம் மாவட்டவெட்டுப்புள்ளிகளுக்கு

தொடர்ச்சி... (பக்கம் -15 )

## அறிவாலயத்தின் கௌரவிப்பு நிகழ்வு



மட்டக்களப்பு - பண்டாரியாவெளி அறிவாலயம் அமைப்பின் அனுசரணையில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு செவ்வாய்கிழமை (09) கொக்கட்டிச்சோலை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

அறிவாலயம் ஆலோசகர் சி.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அறிவாலயம் அமைப்பின் நிறுவனர் அலையப்போடி நல்லரெத்தினம், மட்டக்களப்பு மாவட்ட தமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், ஞா.ஸ்ரீநேசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.
இந்நிகழ்விலன்போது மட்டக்களப்பு மேற்கு வலயத்தில் வெட்டுப் புள்ளிகளுக்குமேல் பெற்ற 43 மாணவர்களுக்கு வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு, வைப்புப் புத்தகங்களும் வழங்கப்பட்டன.



# பட்டறிவு

## 'ஒரே வீட்டில் புசித்தல்'
## சிங்கள சமூக அமைப்பில் 'பல கணவர் முறை'

"எக கே கேம" (Eka Ge Kaema) என்பதை தமிழில் "ஒரே வீட்டில் புசித்தல்" என்று நேரடியாக பொருள் கொள்ளலாம். ஒரே குடும்பத்திச் சேர்ந்த சகோதரர்களுக்கு ஒரே பெண்ணை மணம்முடித்து வைப்பது சிங்கள சமூக அமைப்பில் குறிப்பிட்ட சமூகப் பிரிவினர் மத்தியில் காலாகாலமாக பாரம்பரியமாக கடைபிடிக்கப்பட்டு வந்த ஒரு வாழ்க்கைமுறை.

ஒன்றுக்கு மேற்பட்ட ஆண் சகோதரர்களுடன் வாழ்க்கையைப் பகிர்ந்துகொள்ளும் மணமுறை நெடுங்காலமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு முறையாக நிலவி வந்திருக்கிறது. அந்தப் பெண் ஆண் சகோதரர்களுடன் அன்பையும், பாலுறவையும் பகிர்ந்துகொள்வார். அதேவேளை ஆண்கள் "பொது மனைவி" என்று கூறுவதை தவிர்த்தார்கள். அதற்குப் பதிலாக "ஒரே வீட்டில் உண்கிறோம்" என்கிற சொல்லைப் பயன்படுத்துவார்கள். அதுபோல மனைவி "நான் மூவருக்கும் உணவு சமைத்துப் போடுகிறேன்" என்பார் என்று ருல்ப் பீரிஸ் தனது "சிங்கள சமூக அமைப்பு: கண்டி யுகம் (1964)" என்கிற நூலில் குறிப்பிடுகிறார். இதை சேர் பொன் அருணாச்சலமும் எழுதியிருக்கிறார்.

"பலகணவர் மணம்" அல்லது "பல்கொழுநம்" (Polyandry) என்று அகராதிகள் இதற்கான பதங்களை அறிமுகப்படுத்துகின்றன. நேபால், சீனா, வடஇந்திய பகுதிகளிலும் பல்வேறு சமூகக் குழுமங்களிடையே இந்த வழக்கம் இருந்து வந்திருக்கிறது.

"பண்டைய தாய்வழிச் சமூகத்தில் பல ஆண்கள் ஒரு பெண்ணை பொதுவில் அனுபவித்தார்கள். பிறக்கும் குழந்தைக்கு தாய் யார் என்று தெரிந்திருந்தது. தந்தை யார் என்று தெரிந்திருக்கவில்லை. பெண்ணைச் சுற்றியே வம்சாவளி அமைந்தது. எனவே ஆணை விலக்கிவிட்டு பெண்வழியில் மட்டுமே இரத்த உறவு கணக்கிடப்பட்டது" என்று எங்கெல்ஸ் எழுதிய குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம் நூலில் குறிப்பிடுவார். காலப்போக்கில் இவை எப்படி எல்லாம் மாறி இன்றைய குடும்ப அமைப்பு முறை நிறுவப்பட்டது என்பது தனிச்சொத்துடைமையின் நீட்சியே.

மகாபாரதக் கதையில் பாஞ்சாலி பஞ்சபாண்டவ சகோதரர்கள் ஐவருக்கு மனைவியாக இருந்த கதை இன்றும் ஒரு வியப்பான கதையாக நோக்கப்படுகிறது. சிங்கள சமூகத்தில் நிலவும் குடும்ப – மண உறவுகள் பண்பட்டதாகவும், இனிமையானதாகவும் இருகிறது. இது போல மனித சமூகத்தில் சொற்பமாகவே காணப்படுகிறது." என்று ஜோன் டேவி என்கிற ஆங்கிலேய ஆய்வாளர் தனது நூலில் தெரிவிக்கிறார். (Davy, John (1821), An Account of the interior of Ceylon).



பாலுறவு, விவாகம், விவாகரத்து போன்றவை மிகுந்த தாராளவாத, திறந்த, சுதந்திரமான ஒரு முறைமை சிங்கள சமூகத்தில் ஒரு காலத்தில் நிலவியிருப்பதை இனங்கான முடிகிறது. ஓர் ஆண் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை ஒரே சமயத்தில் மணந்து கொள்வதை பொலிஜினி (Polygyny) என்பார்கள். ஒரு பெண் ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்களை ஒரே சமயத்தில் மணந்து கொள்வதை பாலியாண்டரி (Polyandry) என்பார்கள். கண்டிய சிங்கள சமூகத்தில் இந்த இரண்டும் வழக்கத்தில் இருந்திருக்கிறது.

உலகம் முழுவதும் ஆண்கள் பல பெண்களை திருமணம் செய்துகொள்வதை அத்தனை பெரிய அதிசயமாக பார்ப்பதில்லை. ஒரு வகையில் பல இனக்குழுமங்களில் அது ஏற்றுக்கொள்ளப்பட்டே இருக்கிறது. ஆனால் பெண்கள் பல ஆண்களை திருமணம் செய்துகொள்வதை ஆணாதிக்க சமூக அமைப்பு ஆச்சரியமாகவும், அதிசயமாகவும், கலாசார சீர்கேடாகவும் பார்க்கிறது. வெறுக்கத்தக்க ஒன்றாகவும், ஒழுக்க மீறலாகவும் புனைந்தே வருகிறது.

கணவனின் இறப்பு, விவாகரத்து, விலகல் என்பவற்றின் பின்னர் செய்துகொள்ளும் மறுமணத்தையே ஏற்றுக்கொள்ளாத சமூகம் ஒரே சமயத்தில் பல ஆண்களுடன் வாழ்கையைப் பகிர்வதை ஏற்றுக்கொள்ளுமா என்ன? ஆனால் சிங்கள சமூக பண்பாட்டில் நெடுங்காலமாக பொதுவழக்கில் எற்றுகொள்ளப்பட்டிருந்தது. அந்த சமூக் வழக்கை முறைகேடான ஒன்றாக பார்க்கவில்லை.

இலங்கையில் பலதாரமணம் சட்டவிரோதமான ஒன்று. ஆனால் கண்டிய திருமணச் சட்டத்தில் ஒரு பெண் குடும்பத்தில் மூத்தவனை முறைப்படி திருமணம் செய்தாலும் அவள் அவனது சகோதரர் அனைவருக்கும் மனைவியாகிற முறை ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக இருக்கிறது. இந்தத் திருமணம் சகோதரர்களுடன் ஒன்றாக செய்துகொள்ளப்படுவதில்லை. ஒருவர்; குறிப்பாக மூத்தவர் தான் திருமணம் முடித்து பெண்ணை அழைத்துவருவார். குடும்பத்தின் சொத்துக்கள் அக்குடும்பத்திலேயே தொடர்ந்தும் வழிவழியாக பாதுகாக்கப்படுவதற்காக இது தொடர்ந்து வந்திருக்கிறது. சொத்துக்களைப் பாதுகாப்பது பற்றிய அச்சம் கொண்ட நிலவுடைமைச் சமூகத்தினர் மத்தியில் அதிகம்

என்.சரவணன்

இருந்திருக்கிறது. ஆக கொவிகம சாதியினர் மத்தியிலேயே இந்த வழக்கம் அதிகமாக இருந்துவந்ததை நாம் ஊகிக்கலாம். அதேவேளை சிங்கள சமூகத்தில் சகல சமூக மட்டத்திலும் இந்த வழக்கம் இருக்கவே செய்தது அதையே பல்வேறு ஆய்வாளர்களும் ஒப்புக்கொள்கிறார்கள்.
ரொபர்ட் நொக்ஸ் தனது நூலில் 17 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் கைதியாக வாழ்ந்தனுபவித்து பின்னர் எழுதிய (Historical Relation of Ceylon) நூலில் இதை உறுதிப்படுத்தும் வகையில் கண்டிய சமூகத்தில் ஒரு பெண் இரு கணவர்மாருடன் ஒன்றாக குடித்தனம் நடத்துவது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக இருந்ததாகவும் குழந்தைகள் அந்த இருவரையும் சொந்தத் தகப்பனாக ஏற்றுக்கொண்டிருந்தார்கள் என்பதையும் குறிப்பிடுகிறார்.

"பல கணவர் முறை" இருந்ததற்கான ஒரு நிகழ்வாக "மகுல்மகா விகாரை ஓலைச்சுவடிகள்" வெளிப்படுத்திய ஆதாரம் குறிப்பிடத்தக்கது. 14ஆம் நூற்றாண்டில் ருகுணு தேசத்தை ஆண்ட பராக்கிரமபாகு சகோதரர்கள் ஒரே பெண்ணை திருமணம் முடித்திருந்தார்கள் என்கிறது. கோட்டை பகுதியை ஆண்ட வெது விஜயபாகு தன்னுடைய சகோதரனுடன் மனைவியைப் போது மனைவியாக ஆக்கி வாழ்ந்து வந்தார் என்கிறது வரலாறு.

இலங்கையில் இந்த சம்பிரதாயம் பற்றி சமீபகாலத்தில் அறியத்தந்தது ஒரு தொலைக்காட்சி நாடகமே. 1993 இல் வெளியான "பெத்தேகெதர" (Baddegedara) என்கிற பெயரில் ஜயசேன ஜயக்கொடி எழுதி வெளியிட்ட நாவல் 1996இல் தொலைக்காட்சித் தொடர் நாடகமாக வெளியானது. கிராமத்தில் அண்ணனுக்கு திருமணமுடித்துக் கொடுக்கப்பட்ட பெண் தம்பிக்கும் மனைவியாக்கப்பட்டு நடத்தும் வாழ்க்கைப் பற்றியது அந்தக் கதை. பல ஆண்டுகளுக்கு முன்னரே வழக்கொழிந்து போயிருந்த ஒரு மரபை மீண்டும் நினைவுக்கு கொண்டு வந்து பேசுபொருளாக்கியது இந்த நாடகம் தான். மிகச் சமீபத்தில் தொலைக்காட்சிக்காக ஒரு பாடல் தயாரிக்கப்பட்டது (Eka Gei Kema). அந்தப் பாடலில் மூத்த சகோதரனுக்கு திருமணம் முடித்து கொடுக்கப்பட்ட பெண் இளைய சகோதரனுக்கும் மனைவியாக்கப்பட்டபோதும் அந்தப் பெண் கூடுதலாக ஈடுபாடு காட்டுகின்ற இளைய சகோதரன் படும் வேதனை, ஏக்கம், தவிப்பு, காதல் பற்றியதாக அமைக்கப்பட்டிருந்தது. யூடியூபில் இந்தப் பாடல் மிகவும் பிரசித்தம்.

சகோதரர் ஒருவர் மனைவியுடன் ஒன்றாக உறவுகொள்ளும் போது வெளிக்கதவின் வாசலில் தனது உள்ளாடைத் துண்டை (கோவணம்) சமிக்ஞைக்காக தொங்கவிட்டிருப்பார். மற்றவர் அதைப் புரிந்து கொண்டு விலகிச் செல்வார். இந்தக் காட்சியும் அந்தப் பாடலில் சிறப்பாக பதிவு செய்யப்பட்டிருக்கும்.

### வழக்கொழிந்தது எப்போது?

காலப்போக்கில் இந்த மரபு சமூக அளவில் கேலிக்குரிய ஒன்றாக மாறியபோது மெதுமெதுவாக வழக்கொழிந்து போனது. 1815இன் பின் இலங்கையில் படிப்படியாக ஆங்கிலேய விக்டோரியா சட்டங்கள் அறிமுகமாயின. 1819இல் நீதிமன்ற ஆணையாலர்களால் "பல கணவர்" முறையை பின்பற்றும் சிங்கள அரச அதிகாரிகளை சேவையிலிருந்து நீக்கும்படி அறிவித்திருக்கிறார்கள். பிரிட்டிஷார் பல கணவர் முறையை 1859 இல் தடை செய்தத்துடன் மூன்று வருட சிறைத்தண்டனையை அறிமுகப்படுத்தினார்கள். 1907ஆம் ஆண்டின் 19இலக்க விவாகப் பதிவு சட்டத்தின் படி (ஒரே கணவர் – ஒரே மனைவி) சம்பிரதாயபூர்வமான பல கணவர் முறை முற்றிலும் முடிவுக்கு வந்தது. "Twentieth Century Impression of Ceylon (1907)" (பக்கம் 337) என்கிற நூலில் சேர் பொன் அருணாச்சலம் "கண்டிய சமூக அமைப்பில் நிலவிய ஒரே பெண்ணை பல சகோதரர்கள் மணமுடிக்கும் முறை இனிமேல் சட்டபூர்வமானதில்லை. அவ்வாறான விவாகத்தை பதிவு செய்ய சட்டத்தில் இடமில்லை" என்று குறிப்பிடுகிறார்.

இந்த வழக்கம் தாராளவாத முறை என்று சில ஆய்வாளர்கள் குறிப்பிட்டபோதும் பெண்ணடிமைத்தனம் நிறைந்த ஒன்று. திருமணம்-மணமகன் தெரிவு பெண்ணுக்கு உரிய ஒன்றாக இருக்கவில்லை. பெரியவர்கள் தீர்மானித்து முடித்து வைப்பார்கள். பெண் அந்த வீட்டுக்கு சகல ஆணுக்கும், அவரின் குடும்பத்துக்குமான பணிப்பெண்ணாக செல்கிறார். அந்த ஆண்களுக்குத் தேவைப்படும் போதெல்லாம் பணிவிடையோடு, பாலுறவுத் தேவையையும் நிறைவு செய்யும் ஒரு பாலியல் இயந்திரமாக அப்பெண்கள் நடத்தப்பட்டிருக்கின்றனர்.

தொடர்ச்சி...

## வவுணதீவு பிரதேச செயலகத்தில் சிறுவர்கள் முதியோர் கௌரவிப்பு

ரறேஷ்க்கு பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மண்முனை மேற்கு பிரதேச சபை தவிசாளர் எஸ்.சண்முகராஜா, கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். சோமசுந்தரம் மற்றும் வவுணதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, உதவி பிரதேச செயலாளர், கணக்காளர், உதவி திட்டப் பணிப்பாளர் என பலர் கலந்து சிறப்பித்தனர்.

(வவுணதீவு நிருபர் )

# மட்டக்களப்பின் பிரதான பண்பாடொன்றை அழிக்க வரும் முப்பெரும் பேரலைகள்- 1

தேட்டம்

மட்டக்களப்பின் பூர்வீக மதங்கள்

மட்டக்களப்பின் பூர்வீக மதங்கள் வழிபாடுகள் பற்றிய விஞ்ஞான பூர்வமான ஆய்வுகள் இன்னும் ஆழமாக நிகழவில்லையாயினும் கிடைக்கின்ற தகவல்களையும்ஆய்வுகளையும் வைத்து மட்டக்களப்பின் பூர்வீக மதங்களைப் பற்றி அறியக் கூடியதாகவுள்ளது

இயக்கர், நாகர் என்ற பூர்வீக இனங்கள் பற்றி நாம் அறிவோம். இயக்கர் ஏஸ்ரோயட் இனமக்கள். நாகர் மங்கலோயட் இனமக்கள். இயக்கர் இயற்கை வழிபாட்டையும் (மரங்களில் மலைகளில், நீர் நிலைகளில் உறையும் தெய்வங்களை வணங்கினர். இதனை விட புராதன மட்டக்களப்பு மக்களிடம் திராவிட வழிபாடாம் இலிங்க வழிபாடும் இருந்துள்ளது. பின்னாளில் ஆரியத் தெய்வங்களான விஷ்ணு, காளி, கார்த்திகேயன், பிள்ளையார் வழிபாடுகள் பழைய வழிபாடுகளை மேவி மேலெழுந்தன. இதற்கான ஆதாரங்களையெல்லாம் மட்டக்களப்பில் படுவாங்கரை பிரதேசங்களில் காண முடியும்.

பத்தினி வழிபாடு மட்டக்களப்புக்கு அறிமுகம் செய்யப்பட்டு அது கண்ணகி வழிபாடாக எழுந்த காலத்தில் யகஷர் வழிபாட்டில் வந்த பெண் தெய்வங்கள் அனைத்தும் பின் செல்ல கண்ணகி வழிபாடு முதன்மை பெறலாயிற்று.

மட்டக்களப்பில் இந்த வழிபாட்டு முறைகளும் அக்காலத்தில்வேறானதாக இருந்தது. இன்னும் சில இடங்களில் இவ் வழிபாட்டு முறைகள் வழக்கத்திலுள்ளன. பூசாரிமார் வழிபாட்டு முறை, கட்டாடிமார் வழிபாட்டு முறை, கப்புகனார் வழிபாட்டு முறை, ஆதிக்குடிகள் வழிபாட்டு முறை, சுயவழிபாட்டு முறை என இவ்வழிபாட்டு முறைகளை வகுத்துள்ளார் மகேஸ்வரலிங்கம்.



சிறு தெய்வங்கள் என இந்து மத பெரியோர்களால் அழைக்கட்டும் கண்ணகி, திரௌபதை, காளி, மாரி, வைரவர், நாகதம்பிரான், பெரியதம்பிரான், நரசிங்கவைரவர், பேச்சி அம்மன் முதலான தெய்வக் கோயில்கள் அதிகம் உள்ளதும் வருடம் தோறும் கதவு திறந்து பந்தலிட்டு கும்பங்கள் வைத்து மந்திர உச்சாடனங்கள் முழங்க தெய்வம் ஏறி ஆடி மக்களுடன் தெய்வங்கள் உரையாடுவதும் தீப்பாய்தல், கும்பம் சொரிதல், பலியிடுதல், பள்ளம் என்ற பெருவிழாக்களையும் கொண்டதான ஒரு சமயப் பண்பாடு மட்டக்களப்பிற்கேயுரிய ஒரு பண்பாடாக பல மாற்றங்கள் பெற்ற போதும் இன்றும் நின்று நிலவி வருகின்றது.

மட்டக்களப்பின் பண்பாட்டு மாற்றத்தையும்வழிபாட்டு மாற்றத்தையும் ஏற்படுத்தும்காரணிகளுள் பின்வரும் மூன்றும் முக்கியமானவை. பேரலைகள் போல இவை நம்மைத் தாக்குகின்றன.
ஒன்று ஐரோப்பிய மயமாக்கம்,
இரண்டு சமஸ்கிருத மயமாக்கம்,
மூன்று எலக்ரோனிக் மயமாக்கம்.
முதல் அலை ஐரோப்பிய மயமாக்கம்

மட்டக்களப்புக்கு ஐரோப்பியர் 16ம் நூற்றாண்டிலிருந்து வரத் தொடங்கி பின்னரே மட்டக்களப்பு ஐரோப்பிய மயமாக்கத்திற்குட்படத் தொடங்கியதெனலாம். கறுப்புத்தோல் கொண்ட வெள்ளை மூகமூடி மனிதர்களை உருவாக்குவதும் ஐரோப்பியச் சாயலில் அவர்களின் பண்பாட்டை உருவாக்குவதுமே ஐரோப்பிய காலனித்துவ வாதிகளின் நோக்கமாகும். இங்கு மக்கள் மத்தியில் வழிபாட்டிலுள்ள தெய்வங்களையும், வழிபாட்டு முறைகளையும் காட்டுமிராண்டிதனமானவை எனப் பிரசாரப்படுத்தியமை மாத்திரமன்றி அவற்றை அழிக்கும் வேலைகளிலும் ஐரோப்பிய காலனித்துவ வாதிகள் ஈடுபட்டனர்.

அந்நியருக்கெதிரான போரில் சமயம் முன்னிலை வகுத்தது.

யாழ்ப்பாணத்தில் ஆறுமுக நாவலர் ஆங்கிலேயர் மதம் வளர்த்த முறையில் பாடசாலை நிறுவி ஓர் ஒழுங்கு முறைக்குள் இந்து மதத்தை நிலை நிறுத்த முயன்ற வேளை மட்டக்களப்பு, தம் சிறு தெய்வ வழிபாடுகளை அப்படியே தொடர்ந்து செய்ததன் மூலம் ஐரோப்பியத் தாக்கத்திற்குமுகங்கொடுத்தது. எனினும், கட்டிடங்கள் கோயில்களின் சில பகுதிகள் ஐரோப்பிய பாணியில் அமைக்கப்பட்டன.

இந்துக் கடவுளின் திருவுருபங்கள் கூட ஐரோப்பிய ஓவிய பாணியில் வரையப்பட்டன. ஐரோப்பிய மயமாக்கம் மட்டக்களப்பின் பண்பாட்டிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியது.

நடை, உடை, பாவனைகளில் மேற்கு மயம் புகுந்து கொண்டது. ஆங்கிலம் தெரிந்தவரே அறிவாளிகள், நீலக்காற்சட்டை போட்டு சேட்டும் ரையும், கோட்டும் அணிவதே நாகரிகம் என்ற நிலை உருவாகிற்று. ஆங்கிலம் மேலேறி தமிழ்க் கல்வி கீழிறங்கியது. மேற்குலகினர் போல் தம் மக்களை வளர்த்தெடுக்கவே பெற்றோரும் விரும்பினர்.

(தொடரும்)

---

# மலைகளைப் பேசவிடுங்கள்

## கடினமான பிரச்சினைக்கு இலகுவான தீர்வு

(சிறிமாவின் அறிக்கை - இறுதிப்பகுதி)

கலாசார ஒன்றிணைதலும் தனியான தேர்தல் பதிவேடும்

இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளியினர் மிக அரிதாகவே சுதேச மக்களுடன் ஒன்றிணைந்து வாழும் ஒரு சமுதாய மொன்ற எனது கூற்றினை ஆரம்ப பகுதியிலேயே நான் குறிப்பிட்டிருந்தேன். மேலும் இலங்கை பிரஜாவுரிமை வழங்கப்பட்டவர்கள் காலப்போக்கில் தாம் வாழ்கின்ற பிரதேச மக்களுடன் கலாசார ரீதியாக ஒன்றிணைவர் என்பதே எனது விருப்பமும் எதிர்பார்ப்பும் ஆகும்.

இந்திய - பாகிஸ்தான் வதிவிடச் (பிரஜாவுரிமைச்) சட்டத்தின் கீழும் தற்போதைய உடன்படிக்கையின் கீழும் இலங்கைப் பிரஜாவுரிமையைப் பெற்றுக்கொண்ட சகல இந்திய வம்சாவளியினரும் தனியான தேர்தல் பதிவேடொன்றில் பதியப்பட வேண்டுமென எதிர்கட்சி தலைவருடன் எனது கலந்துரையாடலின்போது இணங்கப்பட்டது. அவர்கள் அவ்வாறு தனியான பதிவேட்டில் இடம்பெறுகின்றபொழுது அவர்கள் தமது பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான வாய்ப்பு உள்ளது. இந்த ஏற்பாடானது சுதேச மக்களுடைய அரசியல் நலன்களை பாதுகாக்கிறது. இலங்கைப் பிரஜைகளாக தம்மை பதிவு செய்துகொண்ட இந்திய வம்சாவளியினரை தனியான தேர்தல் பதிவேடோன்றில் பதிவு செய்து கொள்வது தொடர்பான விடயம் இறைமை மிக்க எமது பாராளுமன்றத்தினால் முழுமையாக தீர்மானிக்கப் படக்கூடிய ஒரு விடயமென்பதால் இது பற்றி புதுடெல்லியில் கலந்துரையாடப்படவில்லை.

ஒத்துழைப்பு

ஓர் உடன்படிக்கை கைச்சாத்திடப்படு வதனால் மாத்திரம் பிரச்சினை தீர்ந்துவிட்டதாக அர்த்தமாகாது. இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் இந்திய அரசாங்கம் தனது முழுமையான ஒத்துழைப்பு வழங்கியது. இவ்வுடன்படிக்கையை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு இரு நாடுகளுக்குமிடையில் நெருக்கமான ஒத்துழைப்பும் உடன்பாடும் அவசியம். மேலும் இது கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட ஓர் தேசியப் பிரச்சினை என்பதால் சகல அரசியல் கட்சிகளிதும் மக்களினதும் ஒத்துழைப்பும் உதவியும் சம அளவில் முக்கியத்துவம் பெறுகின்றன.

(சிறிமாவின் அறிக்கை நிறைவு)

கடந்த சில வாரங்களாக 1964 ஆம் ஆண்டு சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தம் மேற்கொள்ளும் பொருட்டு அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க மேலவைக்கு வழங்கிய அறிக்கையினை மலைகளை பேசவிடுங்கள் பத்தியின் ஊடாக வாசிக்க கிடைத்தது. இந்த இறுதிப் பாகத்தில் அவர் கூறியிருக்கும் கருத்துக்களில் கலாசார ஒன்றிணைதல் பற்றிய எதிர்வு கூரல் இன்றைய மலையகத்தில் நடைமுறையாகி வருவதை அவதானிக்க முடிகிறது.

முன்னைய அத்தியாயத்தில் மலையகத் தமிழர்களை எந்தவித்திலும் சுதேச (சிங்கள) மக்களுடன் கலாசார ரீதியாக

**மல்லியப்புசந்தி திலகர்**

சமத்துவமாக வைக்க முடியாது என்பதை வலியுறுத்தியிருந்தார். அதேநேரம், இறுதிப் பகுதியில் இலங்கை பிரஜாவுரிமை வழங்கப்பட்டவர்கள் காலப்போக்கில் தாம் வாழ்கின்ற பிரதேச மக்களுடன் கலாசார ரீதியாக ஒன்றிணைவர் என்பதே எனது விருப்பமும் எதிர்பார்ப்பும் ஆகும் என கூறியிருப்பதானது சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் மலையக மக்களின் கலாசார பின்புலங்களை அழிக்கும் திட்டத்தை சிறிமா கொண்டிருந்துள்ளார் என்பதை தெளிவாக்கின்றது.

1964 ஆம் ஆண்டு அவர் வகுத்த திட்டங்களின் அடிப்படையில் இன்றைய நிலையில் காலி, களுத்துறை, மாத்தறை, குருநாகல், இரத்தினபுரி மாவட்டங்களில் சிங்கள மக்களின் கலாசார பண்பாடுகளுடன் கலந்துவிட்டிருப்பதனை அவதானிக்க முடியும். களுத்துறை போன்ற மாவட்டங்களில் பரவலாக அவர்கள் சிங்கள மொழியில் உரையாடுவதுடன் சிங்கள கலாசார ஆடைகளையே அணிகின்றனர். எனினும் இனத்துவ அடிப்படையில் அவர்கள் சிங்களம் பேசும் தமிழர்களாகவே பார்க்கப்படுகின்றனர், பராமரிக்கப்படுகின்றனர் என்பது கண்கூடு.

அவர்கள் வாழும் பிரதேசங்கள் மிகவும் பின்தங்கிய நிலைமையில் காணப்படுகின்றன. குருநாகல் மாவட்டத்தில் இந்த நிலைமையை அவதானிக்கலாம். மொனராகலை, பதுளை மாவட்டங்களில் கூட அதிகளவான மலையகத் தமிழர்கள் சிங்களத்தில் உரையாடிக்கொள்ளும் ஒரு கலாசாரம் காணப்படுகின்றது.

ஒரு இனம் தனது கலை, கலாசாரத்தை பின்பற்றுவதற்கான உரிமை அரசியலமைப்பு ரீதியாக உள்ளபோதும் கூட அரசியல் ரீதியாக முன்வைக்கப்பட்ட ஒரு தீர்மானத்தின் அடிப்படையில் இரண்டு நாடுகளுக்கு இடையே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் ஆனது ஒரு சமூகத்தின் கலாசாரத்தை பெரும்பான்மை கலாசாரத்துடன் கலக்கச் செய்யும் உள்நோக்கத்தை தெட்டத் தெளிவாகவே கொண்டிருப்பதானது திட்டமிட்ட உரிமை மீறல்ஆகும்.

இதனை சிறிமா பண்டாரநாயக்க வெளிப்படையாக எழுத்து மூலமாக அறிவித்து செய்துள்ளார் என்பதை இந்த அறிக்கை காட்டி நிற்கின்றது.
குடியுரிமை பறிப்பை நியாயப்படுத்துதல், நாடுகடத்தல், உள்நாட்டு நிர்வாகத்தில்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# அம்பாறை மாவட்டத் தமிழர்கள் : (ஓர் அரசியல் வெட்டுமுகம்) பகுதி 22

2000 ஆம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் (திகாமடுல்ல தேர்தல் மாவட்டம்) தமிழர்கள் சார்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியும், இப் பத்தி எழுத்தாளரின் தலைமையிலான அம்பாறைத் மாவட்டத் தமிழர் மகா சங்கச் சுயேச்சைக் குழுவும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தன. தமிழர் மகா சங்கச் சுயேச்சைக் குழுவில் அம்பாறைமாவட்டத் தமிழர் மகா சங்கப் பிரதிநிதிகளுடன் ஈ. பி. டி. பி சார்பிலான இரு பிரதி நிதிகளும், ரெலோ சார்பிலான இரு பிரதிநிதிகளும் இடம்பெற்றிருந்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணி தவிர்ந்த ஏனைய தமிழ் அரசியல் கட்சிகள் அம்பாறைத் மாவட்டத் தமிழர் மகா சங்கச் சுயேச்சைக் குழுவுக்கு ஆதரவு நிலைப்பாட்டை எடுத்துப் போட்டியிடாமல் விலகியிருந்தன.

வேட்பு மனுத் தாக்கல் செய்யும் இறுதி நாளன்று அம்பாறைக் கச்சேரியில் நடைபெற்ற தேர்தல் ஆட்சேபணைகள் தெரிவிக்கும் கூட்டத்தில் தமிழர் மகா சங்கச் சுயேச்சைக் குழுவுக்குத் தலைமை தாங்கிய இப்பத்தி எழுத்தாளர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பு மனுவுக்கு எதிராக ஆட்சேபனையொன்றைக் கிளப்பி கூட்டணியின் வேட்பு மனுவை நிராகரிக்கும்படி தெரிவத்தாட்சி அலுவலகரான அரசாங்க அதிபரை வேண்டினார். வேட்பு மனுவில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அப்போதைய செயலாளராக விளங்கிய இரா. சம்பந்தன் அவர்களின் கையொப்பம் சமாதான நீதாவானால் முறையாக அத்தாட்சிப் படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதே அந்த ஆட்சேபணையாகும். அப்போது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஸ்ரப் அவர்கள் இப்பத்தி எழுத்தாளர் எழுப்பிய ஆட்சேபணையை எதிர்த்து தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஆதரவாக விவாதித்தார். அப்போது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக யு. என். பி பட்டியலில் போட்டியிட அக்கரைப்பற்றைச் சேர்ந்த சேகு இஸபீன் அவர்களும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியின்

**தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்**

கதிரைச் சின்னப்பட்டியலில் போட்டியிட நிசாம் காரியப்பர் அவர்களும் தமிழர் மகா சங்கத்துக்கு ஆதரவாக குரல் எழுப்பினார்கள். அஸ்ரப் அவர்களுக்கும் இப்பத்தி எழுத்தாளருக்கும் இடையில் தொடர்ந்து இடம்பெற்ற வாதப் பிரதிவாதங்களின் முடிவில் ஆட்சேபணையை நிராகரித்த அரசாங்க அதிபர், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் மனுவை ஏற்றுக்கொண்டார்.

ஆட்சேபணை கிளப்பப்பட்ட போது தங்களது வேட்பு மனுவை ஆதரித்து தாங்களே விவாதிக்க முடியாமல்தான் தலைமை வேட்பாளர் திரு. தயானந்தராஜா உட்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணிப் பட்டியலில் அதன் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன் அவர்களினால் நியமிக்கப் பெற்றிருந்த வேட்பாளர்கள் அனைவரும் கூட்டத்தில் வீற்றிருந்தார்கள். அதற்கான ஆளுமையும் ஆற்றலும் அவர்களிடம் இருக்கவில்லை. அதனால்தான் அஸ்ரப், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு உதவ முன் வந்தார். இதன் மூலம் ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை விழுத்த எண்ணினார்.

ஒன்று தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஆதரவாக குரல் எழுப்புவதின் மூலம் தமிழர்களுக்கு தான் எதிரானவர் அல்ல என்பதைக் காட்டுவது. மற்றது அம்பாறைத் மாவட்டத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட தமிழ் அரசியல் கட்சிகள் அதாவது தமிழர் விடுதலைக் கூட்டணியும் அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கச் சுயேச்சைக்குழுவும் போட்டியிட்டால் தமிழர்களுக்குரிய பிரதிநிதித்துவம் கடந்த 1994 ஆம் ஆண்டுப் பாராளுமன்றப் பொதுதேர்தலில் நடந்தது போல் அடிபட்டுப் போய் அந்த ஆசனம் முஸ்லிம் காங்கிரசுக்கு கிடைக்கலாம் என்ற நப்பசையாகும்.

ஆனால் அம்பாறைமாவட்டத் தமிழர்களுக்குரிய பாராளுமன்றப் பிரதிநிதித்துவதைத் தக்க வைக்கவேண்டுமென்பதில் மிகவும் உறுதியாக இருந்த மகா சங்கச் சுயேச்சைக் குழுவின் தலைவரான இப்பத்தி எழுத்தாளர் அன்றைய தினமே கொழும்பு சென்று மறு நாள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பு மனுவுக்கு எதிராக தேர்தல் ஆட்சேபனை வழக்கு ஒன்றினை மேன்முறையிட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். வழக்கில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பு மனு நீதி மன்றத் தீர்ப்பின் மூலம் நிராகரிக்கப் பெற்றது. இதனால் அம்பாறைத் மாவட்டத்தில் தமிழர்கள் சார்பில் அம்பாறைத் மாவட்டத் தமிழர் மகா சங்கச் சுயேச்சைக் குழு மட்டுமே போட்டியிடும் சாதகமான சூழ் நிலை தோற்றுவிக்கப்பெற்றது. ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணி இதனையும் விரும்பவில்லை. காரணம் அதற்குத் தமிழ் மக்களின் நலன்களைத் விடத் தனது கட்சியின் நலனே முன்னுரிமையானது. இன்றும் கூட நிலைமை மாறவில்லை. அன்று தமிழரசுக் கட்சியின் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி, இன்று தமிழரசு கட்சியின் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. பெயர்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# மூதாதையரின் காலடிகள்

## திருகோணமலை மாவட்டத்தின் தனித்துவமான கும்ப விழா - ஒரு பண்பாட்டியல் பார்வை - 1

ஒவ்வொரு பிரதேசத்திற்கும் ஒவ்வொரு தனித்துவமான கலாசார அடையாளம் உண்டு. அந்த வகையில் திருகோணமலை மாவட்டத்தின் தனித்துவமான அடையாளமாக விளங்குவது கும்ப விழாவாகும். நாம் இங்கு கும்பவிழா என அழைத்தாலும் 'கும்பம்' என்பதே இங்கு பொதுப்படையான வழக்கு.



திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலை நகரத்திலும் நகரை அண்டிய பகுதிகளிலும் தம்பலகாமத்திலும் மூதூர் கிழக்கிலும் நிலாவெளியிலும் சாம்பல் தீவிலும் கும்பவிழா பாரம்பரியமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

மூதூர் கிழக்கில் வரலாற்று பழமை மிக்கதும் தொன்ம மரபு சார்ந்த கிராமங்களான சேனையூர், கட்டைபறிச்சான் மருதநகர், கல்லம்பார், அம்மன் நகர், கடற்கரைச் சேனை சாலையூர், சந்தோசபுரம் ஆகிய கிராமங்களில் கும்பவிழா மிகச் சிறப்பாக பரம்பரை பரம்பரையாக கொண்ட்டாடப்பட்டு வருகிறது.

தம்பலகாமம் நீண்ட வரலாறு கொண்ட பண்டைத் தமிழ் கிராமம் கடல் நடுவே காணும் தீவுக் கூட்டங்கள் போல வயல்களின் நடுவே திட்டுத்திட்டாய் தெரியும் குடியிருப்புக்கள் கோயில் குடியிருப்பு, புதுக் குடியிருப்பு, பட்டி மேடு, கூட்டாம் புளி, கள்ளிமேடு, முன்மாரித்திடல், சிப்பித் திடல், வர்ண மேடு, நாயன்மார் திடல், குஞ்சடப்பன் திடல், கரச்சிதிடல், நடுப்பிரப்பன் திடல் என தம்பலகாமத்தில் கும்பவிழா அதன் தனித்துவத்தை பறை சாற்றி நிற்கிறது.

திருகோணமலை கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்து வரலாற்றுப் பழமையும் நவீனத்துவத்தின் வாசல்களையும் ஒருங்கே கொண்ட அழகிய தமிழர் தலை நகர். இங்கு கும்பவிழா ஒரு பெரும் பண்பாட்டின் அடையாளமாக கொண்ட்டாடப்பட்டு வருகிறது. கும்பத்து மாலில் தொடங்கிய இம் மரபு இன்று பெரும் சமஸ்கிருத மயப்பட்ட ஆலயங்களுக்குள்ளும் தன் செல்வாக்கை வீச்சை வெளிப்படுத்தி நிற்கிறது. நகரை அண்டிய பகுதிகளான சல்லி புளியங்குளம் சல்லி லிங்க நகர் நிலாவெளி ஆகிய இடங்களிலும் நகரத்தில் கும்பத்து மால் திருக்கடலூர் பேச்சியம்மன் கோயில், காளி கோயில் பத்தாம் நம்பர் கண்ணகியம்மன், வட

**பாலசுகுமார் சேனையூர்**
**மேனாள் முதன்மையர்**
**கலை கலாசார பீடம்**
**கிழக்குப் பல்கலைக் கழகம்**

பத்திரகாளி கோயில், வராகி கோயில், மடத்தடி மாரியம்மன், மனையாவெளி மாரியம்மன், கந்தசாமி கோயிலடி உவர்மலை காளி கோயில் என நீட்சி கண்டுள்ளது.

கும்பம் என்பதற்கு நேரடியான தமிழ் சொல் குடம் என்பதாகும். இதனால் தான் கும்பாபிசேகம் என்ற சமஸ்கிருத சொல்லுக்குப் பதிலாக குடமுழுக்கு என்ற சொல் பயன்பாட்டில் உள்ளது. ஆனால் கும்பம் ஒரு தமிழ் சொல்லாகவே இங்கு மாறி ஒரு பண்பாட்டின் அடையாளமாக வெளிப்பட்டு நிற்கிறது.

கும்பம் பற்றி பண்டிதர் வடிவேல் அவர்கள் சீக்கியர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது எனக் குறிப்பிட்டுள்ளதாக பல குறிப்புக்களில் எழுதியுள்ளனர். ஆனால் சீக்கியரது மத அனுஸ்டானங்களிலோ அவர்களது கலை நிகழ்வுகளிலோ இத்தகைய கலாசார அடையாளங்களை காணமுடியவில்லை. அவர்களது நடனமாக பங்காரா நடனமும் அதனோடு இணைந்து துள்ளல் இசையும் அமைந்திருக்கிறது. அத்துடன் அவர்களது சடங்கு முறைகளில் கும்பம் போன்ற எந்த ஆதாரத்தையும் காணமுடியவில்லை.

இலங்கையில் வேறு எங்கும் கும்ப விழா நடைமுறையில் இல்லையென்றே சொல்லலாம். மட்டக்களப்பில் கும்பம் சொரிதல் நடைமுறையுள்ளது. மாரியம்மன் பேச்சியம்மன் சடங்குகள் முடிவடைய கடைசி நாளில் கடலில் அல்லது ஆற்றில் கும்பம் சொரிதல் சடங்கு நடைபெறும். அதற்கும் திருகோணமலையில் நடக்கும் முறைமைகளுக்கும் நிறையவே வேறுபாடு காணப்படுகிறது.

திருகோணமலையில் நடைபெறும் கும்பவிழா நவராத்திரியோடு தொடர்புபட மட்டக்களப்பு கும்பம் சொரிதல் வைகாசி ஆனி மாதங்களில் நடைபெறும். மாரியம்மன் சடங்குகளோடு தொடர்புபட்டு நிற்கிறது.

கும்ப விழா எப்போது தொடங்கியது என்ற கேள்வி பலர் மனதிலும் எழுவது இயற்கையே. என்னிடமே பலர் கேட்கிருக்கிறார்கள். சடங்குகளுக்கும் நம்பிக்கைகளுக்கும் தொடக்கமென்ன? முடிவென்ன? என அடிமுடி தேடமுடியாது. சடங்குகளும் நம்பிக்கைகளும் மனித நாகரிகத்தின் தொடர்ச்சியான செயற்பாடுகளே. அவை காலங்காலமாக பல தலைமுறைகள் தாண்டி நீண்டு

தொடர்ச்சி... (பக்கம் -15 )

NCL
NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY



Are you 18+ and have GCSEs or work experience?

Do you have A levels but missed your place at university?

- Foundation Degree Business (London Metropolitan University)
- Foundation Degree Hospitality Management (London Metropolitan University)
- HND Business (Pearson)
- HND Hospitality Management (Pearson)
- BA (Hons.) Final Year- Business (London Metropolitan University)
- BA (Hons.) Final Year- Hospitality Management (London Metropolitan University)

Student Finance Available

Judian Joseph
Mob: 07759802175
Mob: 07453641556

## நான்கு கலைஞர்களுக்குக் கௌரவம்






மட்டக்களப்பு மாவட்ட விஸ்வகர்ம சம்மேளனம் அரசடி மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் நடாத்திய கௌரவிப்பு விழாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நான்கு கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட விஸ்வகர்ம சம்மேளனத்தின் தலைவரும் மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினருமான சிவம் பாக்கியநாதன் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில், இசைத் துறைக்கு பெருமை சேர்த்த மட்டக்களப்பின் சிறந்த ஒரு சங்கீத ஆசிரியையான சாந்தினி தர்மநாதன் (சங்கீதம்) அவர்களும், சிங்கப்பூர் அப்சராஸ் கலையக நடன விரிவுரையாளரும் மற்றும் சர்வதேசத்தில் தனது நடன நிகழ்ச்சிகளை வழங்கி தடம்பதித்த பரதநாட்டியக் கலைஞர் மோகனப்பிரியன் தவராஜா(நடனம்)வும், இலங்கை வானொலி, தேசிய பத்திரிகைள் மற்றும் சஞ்சிகைகளில் தனது கவிதை ஆக்கங்களைப் பிரசுரித்து கவியரங்குகளையும் நடாத்தி மற்றும் கொழும்பு செட்டியார் தெருவில் நகைகளை வடிவமைப்பதில் சிறந்து விழங்கிய பாண்டியூர் பொன் நவநீதன் (கவிதை)அவர்களும், மற்றும் மீன்பாடும் தேனாட்டிற்கு புகழ் சேர்த்த முழக்கம் முருகப்பா இம்மண்ணிற்குச் செய்த பணியை நினைந்து நாட்டிய வித்தியா நடனப் பட்டறையின் மிருதங்கப் பயிற்றுனராக கடமை புரிந்து வரும் மிருதங்க வித்துவான் இரா நித்தியானந்தன் (மிருதங்கம்) அவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

## தேசிய மட்டத்தில் சாதனை



மட்/ மயிலம்பாவெளி ஸ்ரீ விக்நேஸ்வரா வித்தியாலய மாணவி வி.வினுஜிக்கா அகில இலங்கைத் தமிழ்மொழித் தினப் போட்டியில்(2018) தேசிய மட்டத்தில் பிரிவு 5 சிறுகதை ஆக்கப் போட்டியில் 2ஆம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்

இவரால் மட்டக்களப்புக் கல்வி வலயம் பெருமைகொள்கிறது. அந்த மாணவியுடன் அவரை நெறிப்படுத்திய ஆசிரியை திருமதி ம.ஸ்ரீ ஜெயக்குமார் அவர்கள் காணப்படுகிறார்.

அன்னை ஸ்ரீ பேச்சியம்மன் ஆலய
நவராத்திரி விழா நிகழ்வுகள் - 2018



தினமும் பூசைகள் யாவும் மாலை 06மணி முதல் நடைபெறும்

துர்க்கை அம்மாள் பூசை.
09-10-2018
10-10-2018
11-10-2018

லக்ஷ்சுமி பூசை.
12-10-2018
13-10-2018
14-10-2018
15-10-2018

சரஸ்வதி பூசை.
16-10-2018
17-10-2018
18-10-2018

ஏடு தொடக்கும் நிகழ்வு
காலை 07மணி முதல்
19-10-2018

(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)

# மட்டக்களப்பு மாநகர சபை தொடர்பான வாசகர் விமர்சனம் மற்றும் ஆலோசனை



மாநகர சபையின் கழிவு அகற்றுதல் தொடர்பான பிரச்சினை முக்கியமானது. மட்டக்களப்பு புளியந்தீவு நகரை அண்டிய பிரேதேசத்தில் வசிப்போர் 85% அரசு தனியார்துறை முழு நேர பணியில் ஈடுபடுவோரே. அவர்கள் அனைவரும் காலையில் 8 மணிக்கு முன்பு வேலைக்கு சென்று விடுவார்கள். கழிவு அகற்றும் வாகனம் இதற்கு பின்னரே வரும். வீட்டில் கழிவுகளை கொடுக்க யாரும் இருக்க மாட்டார்கள். வீட்டு வேலைக்கு ஆட்கள் வைத்திருக்கும் வீடுகள் தற்போது மிக குறைவு. இதனால் MC வாகனம் வரும்போது கழிவுகளை கொடுக்க முடியாது தேங்கும். கழிவுகளை வீட்டின் முன்வைக்கும் போது அது சட்ட பிரச்சினையாக மாறி தண்டப் பணம் செலுத்த நேரிடும்.

குழந்தைகள் வைத்து இருப்போர் குழந்தைகளின் டயப்பர் இரு நாட்களுக்கு பின் வைத்திருக்கும் போது மிகுந்த அசௌகரியங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

கழிவுகளை தரம் பிரித்து உக்கக்கூடிய குப்பைக்கு ஒருநாள், உக்காத குப்பைக்கு ஒருநாள் என்று குறிக்கப்பட்ட நாட்களில் மட்டும் எடுத்தல்.
பொதுவான கழிவுகளை கொட்டுமிடம் இல்லை. இயற்கை அனர்த்தம் மழை காற்று போன்ற அசாதாரண நிலைமையில் மரங்கள் முறிந்து ஏற்படும் குப்பைகள் ஓர் தடவையில் அகற்றாது பகுதியாக அகற்றுதல்.

ஆலோசனைகள்
-----------------------------

மாநகர சபையின் கழிவுகளை அகற்றும் வாகனத்தை இரு நேரத்தில் காலையிலும் மாலையிலும் செயற்படுதல். வேலைக்கு செல்வோர் எதிர்நோக்கும் பிரச்சினையை இது தீர்க்க முடியும். (தற்போது 7-3 மணி வரை ஒருநாளைக்கு என்று உள்ளது இத்தோடு ஒரு shift கூட்டி மாலையில் 4-10 மணிவரையில் அகற்றலாம். இதனால் வேலை வாய்ப்பும் ஏற்படும் இதனால் வாகனத்தின் உச்ச பயனை பெறலாம். இங்கு கத்தாரில் இரவு நேரத்தில் தான் கழிவுகளை அகற்றுவார்கள்) தரம் பிரித்து கழிவுகளை இடக்கூடிய தொட்டிகளை பொதுவான இடங்களில் அல்லது மக்கள் நெருக்கடி அற்ற இடங்களில் அமைத்தல். இதனால் வசதியான நேரத்தில் கழிவுகளை இட முடியும் (உதாரணமாக பின்னேரம் இறால் வாங்கி வந்து அதை சுத்தம் செய்தால் அதன் கழிவை ஒருநாளைக்கு மேலே வைக்க முடியாது அதுபோல குழந்தைகளின் கழிவுகளையும் கூறலாம்).அந்த தொட்டிகளை தினம் மாநகர சபை அகற்றலாம்.

பிரதான வீதிகளில் உள்ள வீடுகளில் தெரு பக்கமாக ஒரு மூலையில் நிரந்த தொட்டி அமைக்க வீட்டாரை அறிவுத்தல் (மதிலில் ஓரிடத்தில் கதவுடன் கூடிய அமைப்பு) cs.JPG

**ஜோர்ஜ் ராஜ்மேனன்**

உக்கக்கூடிய குப்பைக்கு ஒருநாள், உக்காத குப்பைக்கு ஒருநாள் என்று நாட்களை பிரிக்காது ஒரே நாளில் உக்கக்கூடிய குப்பை உக்காத குப்பை என்று இரு வாகனங்களில் குப்பைகள் சேகரிக்கலாம். தெருக்கள்தோறும் அதில் வசிபவர்களைக் கொண்டு மாதந்தோறும் அந்த தெரு சுற்று சூழலையும் சிரமதானம் செய்யும் ஒரு திட்டத்தை ஏற்படுத்தலாம்.

பொது இடத்தில் கழிவு தொட்டிகளைகளை வைத்தால் மக்கள் குப்பைகளை தரம் பிரிக்காது இடுவார்கள் என்பது ஏற்க முடியாத கருத்து. இப்போது குறிப்பிட்ட வீதத்துக்கும் மேற்பட்ட மக்கள் தரம் பிரித்தே கழிவை அகற்றப் பழகி விட்டார்கள். ( வெளிநாடுகளில் கூட பொது இடங்களில் தெருக்கள்தோறும் கழிவு தொட்டிகள் இருக்கும் அதை மட்டக்களப்பில் நடைமுறைப்படுத்த முடியாது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத கருத்து )

# இடப்பற்றாக்குறையை தீர்க்குமா மட்டு மாநகர சபை?



மட்டு போதனா வைத்தியசாலைக்குச் செல்லும் மக்களின் வாகனத் தரிப்பிடத்தில் இடம்போதாமையினால் மக்கள் பெரும் அசௌகர்யங்களுக்கு உள்ளாகின்றனர். இதனால் வீதி ஓரங்களிலும், NO parking இலும், குறுக்கு வீதிகளிலும் வாகனங்களை நிறுத்தி விட்டுச் செல்கின்றனர்.

**லியோண்**


மத்தியேஸ் வீதியில் மாநகர சபையால் அங்கீகரிக்கப்பட்ட மோட்டார், துவிச்சக்கரவண்டி நிறுத்துமிடம் இருக்கின்ற போதிலும் போதியளவு இடவசதி இல்லாமையினால் ஈஸ்வரன் ஒழுங்கையிலும் வாகனங்களை



நிறுத்துகின்றனர். (இங்கு பற்றுச்சீட்டுகள் வழங்கப்படாமை குறித்தும் முறைப்பாடு உள்ளது. இது பற்றி வாகன நிறுத்துமிட உரிமையாளரிடம் வினவிய போது தங்களது தரிப்பிட வசதியின்மை காரணமாக இவ்வாறு செய்வதாக கூறினார். தாம் பெருந்தொகையான பணத்தை முதலீடு செய்து குத்தகைக்கு எடுத்தும் தங்களது இடப்பற்றாக்குறைக்கு எந்தவித தீர்வும் கிடைக்கவில்லை என்றும் இதற்கு மாநரசபை தீர்வு வழங்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார். மாநகரசபை இந்த விவகாரத்தை கவனத்தில் எடுக்க வேண்டும்.

# மட்டு மாநகர சபை

## மாநகர நூலகங்கள் : முடிந்தவரை நல்ல சேவை




மட்டக்களப்பு மாநகர நூலகம் முடிந்தவரை தன்னால் ஆன நல்ல சேவையை வழங்கி வருகிறது என்று கூறுகிறார் மாநகர துணை ஆணையாளர் என். தனஞ்செயன்.

இது வாசிப்பு மாதம், அதற்கான பலவிதமான ஏற்பாடுகளில் ஈடுபட்டிருந்த தனஞ்செயனிடம் மட்டக்களப்பு நூலகத்தை பயன்படுத்துவோர் போக்கு எப்படி இருக்கிறது என்று கேட்டோம். வாசிப்பு இப்போது குறைந்துதான் போயிருக்கிறது என்பதனை மாநகர நூலகங்களுக்கு வரும் வாசகர் எண்ணிக்கை காண்பிப்பதாக கவலை தெரிவித்த அவர், ஆனால், பலர் கையடக்க தொலைபேசிகள் மூலம் வாசிக்கும் பழக்கத்தை அதிகரித்துள்ளனர் என்றார்.

இருந்தபோதிலும், மட்டக்களப்பு மாநகர சபை வாசிப்போர் எண்ணிக்கையை அதிகரிக்க பலவிதமான நடவடிக்கைகளை எடுப்பதாக அவர் கூறுகிறார்.

மட்டக்களப்பு மாநகர சபையின் நிர்வாகத்தில், 4 நூலகங்களும் 5 வாசிப்பு அறைகளும் இருக்கின்றன. நகர பெரிய நூலகம், தரம் 1 ஐ சேர்ந்தது. இதனைவிட புதூர், கல்லடி, அரசடி ஆகிய இடங்களில் 3ஆம் தரத்தை சேர்ந்த நூலகங்கள் இருக்கின்றன. இவற்றைவிட, நாவற்குடா, பாரதி லேன், சின்ன ஊறணி, எல்லை வீதி, மட்டிக்கழி ஆகிய இடங்களில் வாசிப்பு அறைகள் இருக்கின்றன.

2013 வரை 5 லட்சம் ரூபாய்களுக்கும் 2015இல் 10 லட்சம் ரூபாய்களுக்கும் புத்தகங்கள் வாங்கப்பட்டதாகவும், ஆசிய மன்றம் நிறைய புத்தகங்களை வழங்கியதாகவும் அவர் கூறுகிறார்.

சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் நிதி ஒதுக்கியதாகவும் அவர் கூறினார்.

முன்னாள் மாகாண முதல்வரின் நிதி ஒதுக்கீட்டில் புதிய நூலகத்துக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், அது இன்னமும் பூர்த்தி செய்யப்படாமல் இருப்பது குறித்துக் கேட்டபோது, அதற்கு பின்னர் ஆளுனரும் நிதி ஒதுக்கியதாகவும், விரைவில் அது கட்டிமுடிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் கூறினார். நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதற்காக உழைப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பொதுவான வாசிப்புக்காக மக்கள் நூலகம் வருவது குறைந்துள்ளதாகவும் ஆனால், போட்டிப் பரீட்சைகளுக்காக அங்கு மாணவர் வரத்து அதிகரித்துள்ளது என்றும் கூறினார்.

நவீன தொழில் நுட்பம் குறித்த பயிற்சிகள் வாசிகசாலை ஊழியர்களுக்கு தேவைப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த வருட வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நிறைய புத்தகங்களை வாங்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

**ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் உபதேசிய ஆளுகை திட்டத்தின் நன்கொடையின் ஊடாக இந்தப் பக்கத்துக்கான அனுசரணை வழங்கப்படுகின்றது**

# வலுவூட்டல் சங்கம் ஆரம்பம்




மட்டக்களப்பு மாவட்டத்தில் முதன்முறையாக உடல் வலுவூட்டல் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு புதிய நிர்வாகமும் தெரிவு செய்யப்பட்டது. மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வி.ஈஸ்பரன் தலைமையில் இந் நிகழ்வு மட்டக்களப்பு கோப் சிற்றி மண்டபத்தில் செவ்வாய்கிழமை (18ஆம் திகதி) மாலை இடம்பெற்றது.

இக் கூட்டத்தில் இலங்கை உடல் வலுவூட்டல் சங்கத்தின் தலைவர் கித்சிறி பெனான்டோ, முன்னாள் கிழக்கு மாகாணசபைப் பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார், மாநகரசபை உறுப்பினர்களான வி.பூபாலராஜா, து.மதன், பு.ரூபராஜ், கே.றொனி பிரின்ஸன், அம்பாறை மாவட்ட உடல் வலுவூட்டல் சங்கத்தின் தலைவர் சம்பத், விளையாட்டு உத்தியோகத்தர்களான பிரசாத், அனுசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது மட்டக்களப்பு மாவட்டத்தில் முதன்முறையாக மேற்படி சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டதுடன், புதிய நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

அதன் படி மேற்படி சங்கத்தின் தலைவராக முன்னாள் கிழக்கு மாகாணசபைப் பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார், செயலாளராக எம்.லிசோத்மன், பொருளாளராக எம்.துதீஸ்வரன், உபதலைவர்களாக எ.ராஜ்குமார் மற்றும் கே.நிகொல் நிசாந்தன், உபசெயலாளராக எஸ்.நிரோசன், உபபொருளாளராக என்.வினோதரன், போட்டிகளுக்கான செயலாளராக மாநகரசபை உறுப்பினர் கே.றொனி பிரின்ஸன், நிர்வாக உறுப்பினர்களாக எ.அர்ஜுன், டி.இந்துஜன், எ.நிதிசன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இச் சங்கத்திற்கு ஆலோசகர்களாக மாவட்ட அரசாங்க அதிபர் எம்.உதயகுமார், இலங்கை வலுவூட்டல் சங்கத்தின் தலைவர் கித்சிறி பெனான்டோ மற்றும் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வி.ஈஸ்பரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டார்கள்.

## டான் வெற்றிக் கிண்ணத்திற்கான இறுதிப் போட்டி எதிர்வரும் 27 இல்

மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்டச் சங்கத்தின் ஏ பிரிவு முன்னணிக் கழகங்களுக்கிடையில் டான் வெற்றிக் கிண்ணத்திற்காக மூன்றாவது தடவையாக நடத்தப்படும் மாபெரும் விலகல் முறையிலான கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி எதிர்வரும் 27 ஆந் திகதி மட்டு வெபர் மைதானத்தில் நடைபெறவுள்ளதாக சுற்றுப் போட்டிக் குழுத் தலைவர் பொ.மேர்வின் அரங்கம் செய்திகளுக்கு அறிவித்துள்ளார். இப்போட்டியில் ஏறாவூர் இளந்தாரகை அணியும், அரசடித்தீவு விக்னேஸ்வரா அணியும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்டச் சங்கத்தின் ஏ பிரிவு விலகல் சுற்றினதும், வி பிரிவு லீக் சுற்றினதும் இறுதிப் போட்டிகள் எதிர்வரும் 20, 21 ஆந் திகதிகளில் மட்டு வெபர் மைதானத்தில் நடைபெறவுள்ளன. ஏ பிரிவு இறுதிப் போட்டியில் யங்ஸ்டார் கழக அணியும் கடல்மீன்கள் கழக அணியும்; வி பிரிவு இறுதிப் போட்டியில் ரெட்ணம் அணியும் விக்னேஸ்வரா அணியும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கல்லடி வேலூரில் செவணசைட் கால்பந்தாட்டம்

கல்லடி வேலூர் விபுலானந்தா விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு ஏழு வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 13,14 ஆந் திகதிகளில் கல்லடி வேலூர் விபுலானந்தா மைதானத்தில் நடைபெறவுள்ளதாக சுற்றுப் போட்டிக் குழுத் தலைவர் அறிவித்துள்ளார். இப்போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்டச் சங்கத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள ஏ, வி பிரிவு கழகங்களின் அணிகள் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்

Koddamunai Sports Club
Batticaloa

# விளையாட்டு

## தேசிய கராத்தே போட்டியில் கல்முனைக்கு பெருமை சேர்த்த சகோதரர்கள்!



விளையாட்டுதுறை அமைச்சினால் நடாத்தப்பட்ட 44வது தேசிய விளையாட்டு விழாவில் தேசிய கராத்தே போட்டி கடந்த 27,28,29 ஆகிய தினங்கள் கொழும்பு டொரிங்டன் உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இப்போட்டி நிகழ்வில் கிழக்கு மாகாணத்தை பிரதிநிதிப்படுத்தி கல்முனை சேனைக்குடியிருப்பை சேர்ந்த தெற்காசிய சம்பியன் S.பாலுராஜ் மற்றும் அவரின் சகோதரர்களான S.கோமன்ராஜ், S.சோபன்ராஜ் ஆகியோர் பதக்கம் வென்று JKMO கழகத்துக்கும் கிழக்கு மாகாணத்துக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

பாலுராஜ் காட்டா பிரிவில் இம்முறை தங்கம் வென்று தொடர்ச்சியான முறையில் 7 வருடங்களாக பதக்கத்தினை தனதாக்கியதோடு மூன்றாவது முறையாக சிறந்த வீரருக்கான கிண்ணத்தையும் பணப்பரிசினையும் தனதாக்கிக்கொண்டார்.

குமு காட்டா நிகழ்வில் சகோதரர்கள் மூவரும் இணைந்து வெண்கல பதக்கம் வென்றனர்.

இவர்களது JKMO கழகத்தின் கிழக்கு மாகாணத்தின் பிரதம போதனாசிரியரான Sensei (Eng) S.முருகேந்திரன்(International Black-belt 6th Dan (JAPPAN), Asian Referee)

அவர்களின் பயிற்றுவிப்பில் சிறந்த பயிற்சியினை மேற்கொண்டு பதக்கங்களை இவர்கள் வென்றனர்.

பதக்கம் வென்று கிழக்கு மாகாணத்துக்கும் பெருமை சேர்த்த சகோதரர்களுக்கு கிழக்கு மாகாண விளையாட்டு பணிப்பாளர் திரு.என்.மதிமண்ணன் அவர்களும் அம்பாறை மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் எம்.ஐ.எம். அமீர் அலி அவர்களும் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் திரு.எஸ்.ஜெயரூபன் அவர்களும் கல்முனை வடக்கு பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் கல்முனை பிரதேச அமைப்புக்கள் கழகங்கள் ஆகியனவும் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

(காரைதீவு நிருபர் சகா)

## விபுலானந்தாவில் சிறுவர்தின விளையாட்டுப்பயிற்சியில் மாணவர்கள் !



சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி காரைதீவு விபுலாநந்த மத்திய கல்லூரியில் மாணவர்களுக்கான கிரிகட் மற்றும் வலைப்பந்தாட்ட போட்டிகள் மிகவும் சிறப்பாக இடம் பெற்றன. பாடசாலை மைதானத்தில் அதிபர் தி.வித்யாராஜன் பிரதிஅதிபர் ம.சுந்தரராஜன் உள்ளிட்டவர்கள் கிரிக்கட் குழுவினரை அறிமுகம்செய்து போட்டியை ஆரம்பித்துவைப்பதையும் மாணவிகள் வலைப்பந்தாட்டத்திலீடுபடுவதையும் காணலாம்

படங்கள் காரைதீவு நிருபர் சகா

## ஆட்டம் கைவிடப்பட்டது



இலங்கை அணிக்கு எதிரான இங்கிலாந்தின் முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் ஆட்டம் மழை காரணமாக கைவிடப்பட்டது.

தம்புள்ள நகரில் நடந்த இந்தப் போட்டியின் போது மழை காரணமாக ஆட்டம் கைவிடப்படுவதற்கு முன்னதாக இங்கிலாந்து அணி 2 விக்கட்டுகள் இழப்புக்கு 92 ஓட்டங்களை பெற்றிருந்தது.

இரண்டாவது ஒருநாள் ஆட்டம் சனிக்கிழமை நடக்கவிருக்கின்றது

# கலித்தொகை இன்பம்

## மனம் விரும்புதே உன்னை!



சட்டத்தரணி, பாடும்மீன்
சு.ஸ்ரீகந்தராசா

விதை விதைத்தல், அருவிவெட்டுதல், ஆடுமாடு மேய்த்தல் என்று ஓடியோடி உழைத்துப் பல தொழில்களைச் செய்யும் முல்லை நிலத்து மக்கள் உடற்பலம் மிக்கவர்கள். தலைவன் தொழில் காரணமாக பிரிந்து செல்வதும் அவன் வரும்வரை கவலையோடு தலைவி காத்திருப்பதும் முல்லைநிலத்து மக்களின் வழமையான வாழ்க்கைமுறை. அதனால்தான் இருத்தலும் இருத்தல் நிமித்தமும் முல்லை நிலத்து உரிப்பொருள் என இலக்கணம் வகுக்கிறது தொல்காப்பியம்.

ஏறுதழுவுதல் முல்லைநிலத்துப் பண்பாடு. வசதிபடைத்தவர்களது வீட்டிலே ஒரு பெண்குழந்தை பிறந்துவிட்டால், அவள் கன்னிப்பருவத்தை அடையும்போது அந்த வீட்டிலே நன்கு மதமதத்து வளர்ந்த நிலையிலே ஒரு காளையும் நிற்கும். அதற்கென்றே வளர்க்கப்பட்ட அந்த முரட்டுக்காளையை அடக்குபவனுக்கே அந்தப் பெண்ணை மணமுடித்துவைக்கும் ஏறுதழுவுதல் என்ற வழக்கம் பண்டைத் தமிழகத்தில் நிலவியமையைக் கலித்தொகையின் முல்லைத்திணைக்குரிய (முல்லைக்கலி) பாடல்கள் நன்கு எடுத்தியம்புகின்றன.

வீரமும் காதலும் விளைந்த நிலமாக சுவைமிகுந்த பாடல்களால் முல்லை நிலம் விபரிக்கப்படுகின்றது.

முல்லைக்கலியின் பாடல்கள் தலைவன், தலைவி, தோழி என்பவர்களுக்கிடையிலான உரையாடல்களாக, நாடகம் போல அமைந்துள்ளமை ஒரு தனிச்சிறப்பாகும். இதோ அப்படியொரு காட்சியைச் சித்திரம்போல நமக்குச் சித்தரித்துக் காட்டுகின்ற ஒருபாடல்.

மலர்பறித்து வருவதற்காகத் தோழிகளோடு வனத்திற்குச் செல்கிறாள் ஒருத்தி. பனையோலையால் நெய்யப்பட்ட கூடைகளோடு செல்லும் அவர்கள் எல்லோரும் மகிழ்சியாக மலர்களைப் பறித்துக் கூடைகளிலே நிரப்பிக்கொண்டு திரும்பி வருகிறார்கள். ஒவ்வொருத்தியும் அவரவர் வீட்டுக்குச் செல்கிறார்கள். தலைவியும் தன் வீட்டைநோக்கி மலர்க்கூடையுடன் நடந்து செல்கிறாள். அப்போது அவளை வழிமறித்துக் காதல் வார்த்தை பேசுகிறான் ஒருவன்(தலைவன்). அவளுக்கும் அவன்மேல் காதல் பிறக்கிறது. இருவருமே தம் காதலை வெளிப்படையாகக் கூறாமல் மறைமுகமாக உணர்த்துவதாக அமைந்துள்ளது இந்தப்பாடல். இருவரின் உரையாடல்களும் ஒரேபாடலில் அடங்குவது இதன் தனிச்சிறப்பு.

“மாண உருக்கிய நன்பொன் மணிஉறீஇ

பேணித் துடைத்தன்ன மேனியாய்! கோங்கின்

முதிரா இளமுகை ஒப்ப, எதிரிய
தொய்யில் பொறித்த வனமுலையாய்! மற்று நின்கையது எவன்? மற்று உரை.

கையதை சேரிக்கிழவன் மகளேன் யான், மற்று இ ஃ தோர்

மாதரப் புலைத்தி விலையாகச் செய்ததோர்

போழில் புனைந்த வரிப்புட்டில் - புட்டிலுள் என் உள?

காண்தக்காய்! எற் காட்டிக்காண்

காண் இனி, தோட்டார் கதுப்பின் என்தோழி அவரொடு

காட்டுச் சார்கொய்த சிறுமுல்லை, மற்று இவை.

முல்லை இவை ஆயின் - முற்றிய கூழையாய்!

எல்லிற்றுப் போழ்தாயின் - ஈதோளிக் கண்டேனால்,

செல் என்று நின்னை விடுவேன் யான், மற்று எனக்கு

மெல்லியது ஓராது அறிவு.”

(கலித்தொகை. முல்லைத்திணை பாடல்: 17. பாடியவர்: சோழ மரபிலே தோன்றிய சோழன் நல் உருத்திரன் என்ற புலவர்.)

பாடல் சொல்லும் உரையாடல் இதுதான்.

அவன் கேட்கிறான்: உருக்கிய பொன்னில் நீலமணியைப் பதித்து அமைத்து மெருகூட்டியதுபோல அழகிய உடலைக் கொண்டவளே! இலவமரத்தின் இளமொட்டைப்போல விம்மிப்புடைத்த மார்பகங்களை உடையவளே! உனது கையிலே என்ன இருக்கிறது என்று சொல்வாயா?

அவள் சொல்கிறாள்: நான் இந்த ஊரின் தலைவரின் மகள். இது புலைத்தியொருத்தி செய்து எனக்கு விற்ற, பனையோலையில் செய்து வண்ணம் தீட்டப்பட்ட கூடை.

அவன் : கூடை என்பது எனக்குத் தெரியும். கண்களால் பார்த்துக்கொண்டே இருக்கத்தக்க அழகியே! அந்தக் கூடையினுள்ளே என்ன இருக்கிறது? அதை எனக்குக் காட்டுவாயா?

அவள் : இதோ பார்த்துக்கொள். இவையெல்லாம் எனது தோழிகளோடு நான் காட்டிலே பறித்த சிறுமுல்லைப் பூக்கள்.
அவன் : முல்லைப் பூக்கள்தான் இவை. அப்படியென்றால், நீண்டு வளர்ந்து அடர்ந்த கூந்தலை உடையவளே! இப்போது மாலையாகின்றது. ஒருவரை ஒருவர் காணமுடியாதவாறு இருள் சூழ்கின்றது. நீ போகலாம் என்று உன்னை விட்டுவிடுவேன். ஆனால் என் அறிவு மிகவும் மென்மையானது. நல்லது கெட்டதை ஆராய்ந்து பார்க்கும் தெளிவில்லாதது. அது உன்னை விரும்புகிறதே என்னால் என்ன செய்யமுடியும்?

இதுதான் பாடலின் கருத்து. எவ்வளவு இதமான உரையாடல்! பெண்ணொருத்தியை விரும்பி அவளோடு பேசுகின்ற ஆணின் வார்த்தைகளில் இருக்கும் நாகரிகமும், நாணத்தோடு அவனுக்குப் பதில்கூறும் பெண்ணின் நளினமும் இலக்கியச்சுவையோடு எடுத்தியம்பப்பட்டுள்ள இதுபோன்ற பாடல்களைப் படிக்கப்படிக்க அவற்றில் அடங்கியுள்ள காட்சிகள் நம் மனத்திரையில் விழுந்து நம்மைப்பரவசப்படுத்துகின்றன.

தமிழ் இலக்கிய ஆர்வலர்களுக்காக மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தின் சார்பில், அதன் தலைவர், புரவலர் விநாயகமூர்த்தி ரஞ்சிதமூர்த்தியின் சமர்ப்பணம் இந்தப் பக்கம்.

# தரணிபோற்றத் தமிழ் வளர்ப்போம்!

## கவிக்கோ வெல்லவூர் கோபாலின் கண்ணகி வழிவாடு - பார்வையும் பதிவும் - நூல் வெளியீடு



மட்டக்களப்பு தமிழ்ச் சங்க வெளியீட்டில் கவிக்கோ வெல்லவூர் கோபால் எழுத்தில் வெளியாகும் 21ஆவது நூலான கண்ணகி வழிவாடு - பார்வையும் பதிவும் நூலின் வெளியீடு மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவர் சைவப் புரவலர் வீ.ரஞ்சிதமூர்த்தி தலைமையில் இவ்வெளியீட்டு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை பகல் நடைபெற்றது.



இவ் நூல் வெளியீட்டில், யாழ் பல்கலைக்கழக தொல்லியல் துறை சிரேஸ்ட பேராசிரியர் கலாநிதி ப.புஸ்பரெட்ணம், பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் தமிழ்ப் பேராசிரியர் கலாநிதி வே.மகேஸ்வரன், கிழக்கு மாகாண காணி, வீதி அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் க.கருணாகரன், பேராதனைப் பல்கலைக்கழக செயற்பாட்டு முகாமைத்துவத் துறைத் தலைவர் கலாநிதி சி.மகேஸ்வரன், கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீட முன்னாள் பீடாதிபதி கலாநிதி கே.ராஜேந்திரம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முதல் பிரதியை உள்நாட்டு இறைவரித்திணைக்கள ஆணையாளர் சட்டத்தரணி மு.கணேசராஜா பெற்றுக்கொண்டார்.



கௌரவ அதிதிகளாக மட்டக்களப்பு சட்டத்தரணிகள் சங்கத்தலைவர் சிரேஸ்ட சட்டத்தரணி க.நாராயணப்பிள்ளை, தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஸ்ட உதவிப்பதிவாளர் சி.சிவகுமார், கிழக்குப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத்தலைவர் கே.சிவகணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



நூல் நயவுரையினை கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் நா.வாமன் நிகழ்த்தினார்.

# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 6

## தரம் 11 - தமிழ்மொழியும் இலக்கியமும்

- மட்டுநகர் யுவன் -

எது நல்ல சினிமா?

இப்பாடப் பகுதி, திரு. தியடோர் பாஸ்கரன் என்பவரால் எழுதப்பட்ட ஓர் கட்டுரையாகும். இதிலிருந்து சில வினாக்களும் விடைகளும் தரப்படுகின்றன. அவை வருமாறு:

1. 'நல்ல சினிமா என்றால் என்ன?' என்பதை ஏன் புரிந்துகொள்ள வேண்டும்?
   - இலக்கியத்தைப் போலவே நமது சினிமா அனுபவம் ஆழமாவதற்காகப் புரிந்துகொள்ள வேண்டும்.

2. 'நினைவில் கொள்ளுங்கள்' என்று கட்டுரை ஆசிரியர் கூறுவதைத் தருக.
   - அச்சில் வருவதெல்லாம் இலக்கியம் ஆகாதது போலவே திரையில் வருவதெல்லாம் சினிமா அல்ல.

3. தமிழ்நாட்டில் சினிமா வளராமைக்கான முக்கியமான காரணம் ஒன்றைத் தருக.
   - நாடகத்துக்கு அடிமைப்பட்டிருக்கின்றமை.

4. சினிமா நாடகத்திற்குள் அடிமைப்படுவதற்கான காரணங்கள் யாவை?
   - ஆரம்ப காலத்தில் புராண நாடகங்கள் படமாக்கப்பட்டமை.
   - நாடகம் பார்ப்போரின் கோணத்திலிருந்தே படமாக்கப்பட்டமை.
   - சென்னையிலிருந்த நாடகக் கம்பனிகள் கல்கத்தா, மும்பை போன்ற நகரங்களுக்குச் சென்று தமது நாடகங்களைப் படமாக்கியமை.
   - அண்மைக்காலம் வரை தயாரிப்பாளர்கள், இயக்குனர்கள், நடிகர்கள், வசன கர்த்தாக்கள், இசையமைப்பாளர்கள் நாடகத் துறையிலிருந்து வந்தவர்களாக இருக்கின்றமை.
   - இன்றய படங்களிலும் நாடகத்தன்மை மிகுந்து காணப்படுகின்றமை.
     - மேடையில் ஏறி நடப்பது போல கதாபாத்திரம் சதுரமான திரையின் விளிம்பிலிருந்து வருதல், வசனத்தைப் பேசி பக்கவாட்டில் மறைதல், கத்திப் பேசுதல், பேசும் போது பின்னணி இசை ஒலித்தல்.

5. சினிமாவின் சிறப்பம்சம் என்ன?
   - சினிமா மொழிதான் சிறப்பம்சமாகும்.
6. சினிமாமொழி மூன்று வகைகளைக் கொண்டது. அவை எவை?
   - காட்சிப்படிமம், ஒலி, படத்தொகுப்பு என்பனவாகும்.
7. மேற்கூறிய மூன்றினுள் சினிமாவின் இலக்கணத்துக் அடித்தளம் எது?
   - படத்தொகுப்பு
8. காட்சிப்படிமங்களை இணைக்கும் முறைகள் மூன்றையும் குறிப்பிடுக.
   - கண் இமைப்பது போலக் காட்சி மாறுவது கட் (cut) எனப்படும்.
   - ஒரு காட்சி மங்கி அதே தருணத்தில் அடுத்த காட்சி திரையில் தோன்றுதல். இது மயங்கித் தெளிதல் (Dissolve) எனப்படும்.
   - திரை இருண்டு பின் மறுகாட்சி வருவது. இது இருண்டு தெளிதல் (Fade-in and fade-out) எனப்படும்.
9. நல்ல சினிமா எப்போது பிறக்கிறது?
   - சினிமா மொழியை, அதன் தன்மையைத் தனித்துவத்தை உணர்ந்து அதை அழுத்தமாகக் கையாளும் போது நல்ல சினிமா பிறக்கும்.
10. சினிமா மொழியை வளமடையச் செய்யும் முறைகளுள் ஒன்றைக் குறிப்பிடுக.
    - குறியீடுகள் முறை
11. நல்ல சினிமாவை அனுபவிக்க முடியாமைக்கான காரணம் யாது?
    - நல்ல சினிமா தொடர்பான பரிச்சயமின்மை.
12. 'சினிமாவின் சக்தி' என்பது என்ன?
    - சினிமா மொழியானது மொழிபெயர்க்க முடியாதது. மனித குலத்திற்குப் பொதுவானதாக இருப்பது.
13. சினிமாவைப் பற்றிய விழிப்பு ஏற்படாதவிடத்து என்ன நடக்கும்?
    - புலனளவில் மட்டுமே எம்மால் சினிமாவை அனுகமுடியும்.

இப்பகுதியில் எத்தகைய விடயங்களை எதிர்பார்க்கிறீர்கள் என்பதையும் வினாக்களையும் மாணவர்கள் அரங்கம் பத்திரிகைக்கு அனுப்பிவைக்கலாம். எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும். தாமதிக்காதீர்கள். க.பொ.த.(சா.த) பரீட்சை நெருங்குகிறது.

ஆசிரியர்-அரங்கம், இல:227, பார் வீதி மட்டக்களப்பு.

பக்க அனுசரணை

NCL
NELSON COLLEGE LONDON

IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

# கற்போம்

## கற்றல் நுட்பம்

அறிவு என்பது அனைத்து மாணவர்களுக்கும் பொதுவானது. ஆயினும் அவரவர் கற்றல் முறையிலேயே அதன் விருத்தி தங்கியுள்ளது. தனியாள் வேறுபாடு காரணமாக இவை வேறுபாடும். ஆகவே, ஒவ்வொருவரும் தனிக்கவனம் செலுத்துதல் நல்லது.


யாசிக்கவே வேண்டும். ஆகவே வாசிப்போம்.நுட்பங்கள் முக்கியமானவை அவை வருமாறு
6 R நுட்பங்கள்

1) Read - கிரகித்து வாசித்தல்
மாணவர்கள் தாங்கள் தெரிவு செய்த பாடப்பரப்பின் பந்தியை நன்றாகக் கிரகித்து, விளங்கி வாசித்தல் வேண்டும்.
2) Remember - ஞாபாகத்திற்குக் கொண்டு வருதல் வேண்டும்.
வாசித்த பந்தியைப் பார்க்காமல் ஞாபாகத்திற்குச் கொண்டு வருதல்
3) Re-read - மீண்டும் கிரகித்து வாசித்தல்
மீண்டும் குறித்த பந்தியைக் கிரகித்து வாசித்தல்.
4) Rewrite - மீண்டும் குறிபேட்டில் எழுதுதல்.
வாசித்து நினைவில் வைத்திருப்பதைப் பிரத்தியேக குறிபேட்டில் எழுதுதல்.
5) Rectify - பிழையினை நீக்குதல்
எழுதிய குறிபேட்டில் பிழைகள் இருக்குமெனின் பிழையினைத் திருத்துதல்.
6) Revise - மீண்டும் மீட்டுப் பார்த்தல்.
வாசித்துப் குறிப்பெடுத்து ஞாபகத்தில் வைத்துள்ளவற்றை வேறொரு நேரத்தில் மீண்டும் மீட்டுப்பார்த்தல்.

மா.வரதராஜன்
BA(HONS), DIP.in.CP(Merit), MDE (Merit)

## நூல் அறிமுகம்

- யூனா -




நூல் : சாகாக் கவி
ஆசிரியர் : கவிஞர் மா. சோமலிங்கம்
முகவரி : அம்பலத்தடி, வந்தாறுமூலை, இலங்கை.
விலை : 400/=

சந்தம் நிறைந்த கவிகளுக்குச் சொந்தக்காரர் கவிஞர் சோமலிங்கம் அவர்கள். நயம் நிறைந்த அவரின் கவிதைகள் 'சாகாக் கவி' என்னும் பெயரில் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வெளியீட்டு விழா மட்டக்களப்பு சார்ள்ஸ் மண்டபத்தில் 06.10.2018இல் நடந்தது. சாகாக் கவியிலுள்ள கவிதைகள் பொதுக் கவிதைகள், காதல் கவிதைகள், தெய்வப் பாடல்கள் என்னும் மூன்று தலைப்புக்குள் அடக்கப்பட்டுள்ளன.

இதைவிட இந்நூலாக்கம் பற்றி ..., அணிந்துரை, கவிஞர் தொடர்பான சில பதிவுகள், கொண்டு வந்தது எதுவும் இல்லை என்று நொந்து பாடிய கவிஞன், சாகாக் கவி : சில மனப்பதிவுகள், காசியின் நினைவில் கவிஞர், எங்களுரை என்னும் தலைப்புக்களில் வசனங்கள் பேசுகின்றன.

சிந்தாமணியில் கவிஞர் சோமலிங்கத்தின் கவிதைகள் அதிகமாக வெளிவந்துள்ளன. அக் கவிதைகளுக்குப் பதில் கவிதைகள் எழுதிய விளையாடிய வரலாறும் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

'என் குழந்தை' என்னும் தலைப்பில் தொடங்கி 'காப்பது வடிவேலே' என்னும் தலைப்பில் சாகாக் கவி முடிகிறது. 103 தலைப்புக்களில் கவிதைகள் காணப்படுகின்றன.

தமிழை நுகர்ந்து, தமிழால் வளர்ந்து, தமிழில் நிமிர்ந்து நிற்கும் கவிஞர் சோமலிங்கம் அவர்களின் நல்ல கவிதைகள் கொண்ட 'சாகாக்கவியை' நயந்து பாருங்கள். கவிச்சக்கரவர்த்தி கம்பன், 'பஞ்சு ஒளிர் விஞ்சு குளிர்... என்று தொடங்கி வஞ்சி என நஞ்சம் என வஞ்ச மகள் வந்தாள்' என்று முடியும் பாடலொன்றைக் கம்பராமாயணத்தில் தந்துள்ளான். இந்தப் பாடலுடன் கவிஞர் சோமலிங்கத்தின் கீழ்வரும் கவிதையை ஒப்பிட்டுப்பாருங்கள். கவிஞர் சோமலிங்கத்தின் கவித்திறம் புரியும்.

வஞ்சி அவள் பிஞ்சுபதம் அஞ்சி நடை பயிலும்
மஞ்சு தனைக் கொஞ்சுமலை நெஞ்சில் ஒயில் ஆடும்
நஞ்சில் நனை கஞ்ச விழி கெஞ்சி உறவாடும்
நங்கைதனைக் கண்டு மயில் கந்தன் அடி சாரும்
மஞ்சமதில் நெஞ்ச மொடு நெஞ்சு சம ராடும்
மங்கை குறு வியர்வையது மையல் பயிர் பாயும்
கொஞ்சு இதழ் பிஞ்சு அனல் கண்டுஅது வாடும்
கோலி அணை கைகளிலே கொடியிடையே துவளும்.

# சீதையின் சித்துவம் - தொடர்ச்சி 04

சீதை அக்னிப் பிரவேசம் செய்தாலும் கூட அவளுடைய கற்பொழுக்கத்தில் இராமன் கொண்டிருந்த ஐயம் இறுதி வரையில் அவன் அகத்தை விட்டு அகலவில்லை. இதனால் மனமுடைந்த இராமன் லவன், குசன் என்ற தன் புதல்வர்களையும் தன்னுடைய மக்கள் அல்ல என்று மறுத்துச் சொல்லக்கூடிய அளவிற்கு துணிந்து விட்டான்.



தனது ஆட்சி முறையைப் பற்றி தன் குடிமக்கள் எவ்வாறு பேசிக்கொள்கிறார்கள் என்று பத்ரன் என்ற பிராமணனிடம் இராமன் கேட்கிறான். அதற்கு அவன் "பிரபு தங்களுடைய இலங்கை வெற்றியின் பெருமையைப் பற்றி மக்கள் நாற் சந்திகளிலும், கடை வீதிகளிலும் மிகவாகப் புகழ்ந்து பேசிக் கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் பேசிக் கொண்ட மற்றொரு செய்தியானது உங்களிடம் நான் அதைச் சொல்ல முடியாத அளவிற்கு என் மனதிற்கு வேதனை அளித்தது. அயலானால் எடுத்துச் செல்லப்பட்டு, அவன் பாதுகாப்பிலே பல மாதங்கள் வரை இருந்த சீதையை கூட்டி வந்து அவளுடன் இராமன் சிறிதும் மான உணர்ச்சியில்லாமல் இன்பமாக வாழ்கிறான். இந்த வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையாகுமா? நம்முடைய மனைவியாரும் இதைப்போல் செய்து விட நாமும் இவனைப்போல் அவளைக் கூட்டி வந்து மானமிழந்து அவளுடன் வாழ வேண்டும் போலும்! காரணம் மன்னன் எவ்வழி குடிகள் அவ்வழி என்ற பழமொழி ஒன்று உள்ளதல்லவா? என்று இவ்வாறு தாங்கள் சீதையை எடுத்து வந்ததைப்பற்றியும், அவளின் ஒழுக்கத்தைப் பற்றியும் கேவலமாகப் பேசிக் கொள்கிறார்கள்" என்று கூறினான்.

முன்னரே சீதையின் கற்பொழுக்கத்தைப் பற்றி அரைகுறையாக ஐயங் கொண்டிருந்த இராமன் இப்பொழுது முழுதும் சீதையைப் வெறுத்தான்.

அவள் கற்பிலே முழுதும் அவநம்பிக்கை கொண்டான். சீதை கற்பிழந்தவளா இல்லையா என்ற தடுமாற்றத்திற்கு உள்ளப் போராட்டத்திற்கு எண்ணக் குழப்பங்களுக்கு அவனால் முடிவு காண முடியவில்லை. அவனது அமைதியான உள்ளம் அலை கடல் போல் கொந்தளித்தது; எரிமலை போல் குமுறியது. தனது சீதையால் ஏற்பட்ட இந்த இழிவைப் போக்கிக் கொள்ள வேண்டும். ஆனால் நிறை கர்பிணியாகிய இவளை சிறிதும் கருணை காட்டாமல் கானகத்திற்கு அனுப்ப வேண்டியதுதான் என்று தனக்குள் முடிவு செய்து, அதன்படியே இலக்குவனை அழைத்து சீதையைக் கொண்டு போய் கொடிய விலங்குகள் திரியும் படியான காட்டிலே விட்டு, வாவென்று அவனுக்கு ஆணையிட்டான். இறுதியில் நிலம் வெடித்து சீதையை தனக்குள் ஏற்றுக்கொண்டது. அனாதையாகத் தோன்றிய சீதை அனாதையாக இறந்தாள்.

சீதை கற்பிழந்தவள்தானா என்று இராமன் திடமாக ஐயப்பட்டான். அவளுடையப் வாழ்வின் தொடக்கத்திலிருந்து இதுவரையில் இடம்பெற்ற நிகழ்சிகள் யாவற்றையும் ஆழ்ந்து எண்ணில் பார்த்து சீதை கற்பிழந்தவளே என்ற முடிவுக்கு வந்தான்.

இவனுடைய எளிய மனதையும், இழிவான வாழ்வையும் கண்டு ஊர் சிரித்தது; நகர மாந்தர் நையாண்டி செய்தனர். மானங் காக்க மனைவியை பிரிந்தான். இதுதான்




சீதை வாழ்ந்த வாழ்வும் மறைந்த மறைவுமாகும்.

கம்பநாடனால் கற்புக்கனி எனப் போற்றப்படுகின்ற சீதை என்ன காரணத்தாலோ கட்டிய கணவனாம் இராமனால் கற்பிழந்தவள் என்று பழி சுமத்தப்பட்டாள். கற்புக்கு உதாரணமாக காந்தியாருக்குத் தோற்றமளிக்கும் சீதைப் பிராட்டியார் என்ன ? ஏதுவாலோ இராமன் மனதிற்கு கற்புடைய மனைவியாகத் தோற்றமளிக்கவில்லை.

சீதையின் வாழ்விலே இடம்பெற்றுள்ள இத்தகைய நிகழ்சிகளை வால்மீகி இராமயாணம், அற்புத இராமாயணம் போன்ற பல இராமாயணங்களில் காணும் போது நமக்கும் சீதையின் கற்பைபற்றி இராமானைப் போல் ஐயம் உண்டாகிறது. சீதை கற்பிழந்தவளா என்ற வினா பிறக்கிறது இந்த வினாவிற்கு வாசகர்கள் விடை அளிப்பார்களாக

---

# வடபுலத்து பெண்ணின் பார்வையில் மட்டக்களப்பார்...

## மட்டுநகர் மண்ணைத்தொட்டு 32

**கவிதா என் சேவகி**

-----------------------------

செய்வினை சூனியம் மந்திரம், கண்ஊறு, காத்துக்கறுப்பு எண்டு பலபல விசயங்களில கவிதாவின்ர நம்பிக்கை இருந்தது. அதாலதான் அவ என்னோட நெருக்கமாக வந்திட்டாள். அவளை எனக்கு முன்னபின்ன தெரியாது அவள் புலனாய்வுப்பிரிவில ஒரு சாதாரணப் போராளி. அவள் எங்களப்போல ஏனைய போராளியளோட அள்ளவளப்பா கதைக்க ஏலாது அது பிழை. ஆனா நாங்கள் ராணுவத்தில புலியெண்டு பதிய, அதை அவன் சரணடைஞ்சது எண்டு பதிஞ்சு புனர்வாழ்வு முகாமெண்ட பேரில ஒரிடம் ரெண்டிடமா பிரிச்சு வைச்சிருந்த நேரம்.

என்ன சரியா கால்நீட்டிப்படுக்கவும் இடங்காணாத மண்டபத்தில் படுக்க விருப்பமில்லாம நூறு இருநூறு பிள்ளையள் அந்த மண்டபத்தின்ர கிரவல் முத்தத்தில படுத்திதெழும்பிறதுதான் வழக்கம். அப்பிடி ஒரு நாளில புழுக்கம்தாளாம வெளியில படுக்க நானும் வர, அப்ப இவள் ஒடிவந்து என்ர பாயப் பறிச்சுக் கொண்டு 'ணேய் வாணை என்னோட' எண்டு இழுத்துக் கொண்டு போனாள். பாயக் கொண்டே தனக்கருகில விரிச்சுப்போட்டு 'என்னோட கிட' எண்டாள். அப்பதான் நான் அவள முதல்முதலா பாக்கிறன். ஆனா நான் எதுகுஞ் சொல்லேல்ல படுத்திட்டன். படுத்திருந்துதான் கேட்டன்.

'நான் பயங்கரமா குறட்டைவிடுவன் பரவாயில்லையா?' எண்டு

அவள் பெரிசா சிரிச்சிட்டு, 'இஞ்ச ஆர் நித்திரை கொள்ளப்போகினம் விடிய விடிய



கதைச்சுக் கொண்டிருக்கிறவைதான் கனக்க' எண்டாள்.

'ஓ...' நான் அதுக்கு மேல பேசேல்ல தெரியாத பிள்ளையோட என்னத்தக்கதைக்கிற. ஆனா கவிதாவுக்கு எப்பவோ முற்பிறவியில நான் குடுத்த கடனோ இல்ல இந்தப்பிறவில நான் பட்ட கடனோ அந்தளவுக்கு என்னோட ஒட்டிற்றாள்; இப்பிடியே ஒரு மூண்டுமாசம் இரவில அவளுக்கருகில நான் படுப்பன். ஆனா பகலல்ல அவள் வேற இடத்திலதான் இருந்தாள்; அவளின்ர டீமும் வேற.

கலியாணம் முடிச்சு புரியன்காறன் மட்டக்களப்பால வேவுக்குப்போனடத்தை காணாமப் போட்டான். அவனை வீரச்சாவெண்டு கிளைம் பண்ணிட்டாங்களாம். ஆனா இவளுக்கு சந்தேகம் ஆமிக்காறர் அவனை வச்சிருப்பாங்களெண்டு. தன்ர பேர் கவிதா அவன்ர பேரையும் தன்ரதாக்கி கதைப்பா. பாவம் அவனோட ஒரு வரியமா காதலிச்சு கலியாணம் செய்தவள் ஒருமாசந்தான் வாழ்ந்தாளாம் அதோட அவன் மட்டக்களப்புக்குப் போட்டான். எங்கள வேற முகாமுக்கு கொண்டு போனாங்கள் அங்கயும் இவள் என்னோட வசிக்க முடியேல்ல அது ஒரு பழைய அகதி முகாம் எண்டதால் நாலுபேருக்கு ஒரு வீடெண்டு தரப்பால் கொட்டில் கிடைச்சிட்டுது. பின்ன இவள் வேறயாப்போட்டாள். ஆனாலுமென்ன எனக்கு கறிவச்சுக் கொண்டருவாள். வீட்டிலயிருந்து வாற பலகாரங்கள தூக்கிக் கொண்டு ஓடிவருவாள். ஆரோடயும் சண்டைபிடிக்க, கோள் சொல்ல, முட்டுப்பட போறதே இல்லை. அப்பிடியே ஒரு எட்டுமாச முடிவில் நாங்கள் பூந்தோட்டமுகாமுக்க மாத்துப்பட்டம்.

அங்க பொறுப்பில நிண்டது ஒரு வயது போன ஆமிக்காறி. இவள் அவள கிழவி மெடம் எண்டுதான் சொல்லுவாள் பாவம் மனிசி பெண்டுகளின்ர உரிமையில கடுமையான கரிசனம் வச்சிருந்தது. எனக்கு என்ர வயசைக்காட்டி ஒரு தனி அறை ஒழுங்கு செய்து தந்தாவோ இவள் எங்கயோ நிண்டு கண்டிட்டாள். கிழவி அங்கால போன அடுத்த செக்கன் ஓடிவந்தாள். எப்பிடியெண்டு கேக்கேல்ல. தன்ர உடைமை பையையும்; பாயையும் கொண்டே வந்திட்டாள். 'நான் என்ர அம்மாவோடதான் இருப்பன்' எண்டு. எனக்கென்ன குருச்சந்திர யோகந்தான். குளிக்க தண்ணியெடுத்து வச்சிட்டு வந்து கூப்பிடுவாள். ஒண்டு, இப்ப நான் பொறுப்பில இல்லை. சாப்பாடு தேத்தண்ணி எல்லாம் இருந்த இடத்துக்கு வரும், அந்த அறை படு சுத்தமா இருக்கும், வேளாவேளைக் தேத்தண்ணியோட சிற்றுண்டியள். எல்லாம் அவளின்ர தாய் திருக்கோவில்ல இருந்து செய்து வசுவழிய ஏறியிழந்து கொண்டு வந்து சேர்க்கிறதுதான்.

ஒருகட்டத்தில் காமென்ருகளுக்கு ஆளெடுக்க இவளும் தன்ர பேரைக்குடுத்திட்டு வந்திட்டாள்; கேட்டா 'இஞ்ச அடைஞ்சு கிடந்து என்னமம்மி செய்யிறது போயிற்று வாறனே எண்டாள். எனக்கும் சரியெண்டுதான் பட்டுது. அவள் போயிட்டாள் ஆனா

**தமிழ்க்கவி**

எனக்கு எடுபிடி வேலை செய்ய தன்ர தோழியக் கொணந்து விட்டிட்டுத்தான் போனாள். அந்தப்பிள்ளை என்னோட தங்கயில்ல. அவள் போன பிறகுதான் எனக்கொரு வெப்பியாரம் வந்துது. அவள் என்ர மனசுக்கயும் வாழ்க்கையோடயும் எவ்வளவுக்கு உள்ளுக்க வந்திட்டாள். என்ர பிள்ளையொண்ட இழந்ததுபோல அவ்வளவு சோகமா கிடக்கு. ஒவ்வொரு அலுவலிலும் அவள்தான் நிண்டிருக்கிறாள்; சோந்து படுத்தா 'யோசிக்காதை'. தலையப்பிடிச்சா மாத்திரை. சாப்பாடு விருப்பமில்லயெண்டா அதை பக்குவமா குழைச்சு கையில தந்து, என்னை ஒரு குழந்தைமாதிரித்தான் பாத்திருக்கிறாள். இவளார் எனக்கும் அவளுக்கும் என்ன உறவு. காலம் ஒடாம நிக்குதே. அவையள் திரும்பி வரப் போகினமாம் எண்டு தகவல் வந்துது. நான் அவளுக்காக குளிக்க தண்ணிபிடிச்சு வச்சன் சாப்பாடு கொண்டுவந்து மூடிவச்சன். அவளின் படுக்கைய தாயாரிச்சன். இந்தா பிள்ளையள் வந்திட்டினம் ஆமிக்காறர் பட்டியில சாய்க்கிற மாடுகள எண்ணுறமாதிரி எல்லாரையும் பேரோட சரிபாத்து உள்ளுக்க எடுத்து முடிய, நிண்டு யோசிக்கிறாள். நான் ஓடிப்போய் அவளின்ர பைய வாங்கிக்கொண்டு, அவளை என்ர அறைக்க கூட்டிக் கொணந்தன். தண்ணியக் கொண்டே குளிக்கப்பண்ண, அவளால தாங்க முடியேல்ல. என்னக்கட்டிப்பிடிச்சுக் கொண்டு அழுதாள். எங்கட விடுதலை ஒரே நாளிலதான் நடந்தது. அதுதான் நான் அவளை கடைசியாப்பாத்தது. ரயில் பயணம் போல முடிஞ்சுது அவள் இப்ப என்ன செய்வாள்.

(தொடரும்)

# கட்டிளமைப் பருவ உளநலம்

## மாறிவரும் உலகில் கட்டிளமைப்பருவ உளநலம்

அரங்கம் பத்திரிகையினூடாக, கடந்த 30 வாரங்களாக கட்டிளமைப்பருவ உளநலம் சார்ந்த பல்வேறு விடயங்களை எழுதியுள்ளேன். உளநலமருத்துவர் என்ற வகையில் இன்றைய கால கட்டிளமைப்பருவத்தினரும், அவர்களின் பெற்றோர், ஆசிரியர்கள், உறவினர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை நாளாந்தம் எமது சிகிச்சைக்களத்தில் காணும் பயனாளிகளின் பிரச்சனைகளை மையப்படுத்தி உங்களுக்கு வெளிப்டுத்தினேன். உலக சுகாதார ஸ்தாபனம் ஒக்டோபர் 10ம் நாளை உலக உளநல நாளாக பிரகடனப்படுத்தியுள்ளது. ஒவ்வொரு வருடமும் குறித்ததொரு தலைப்பில், உளநல நாள் கொண்டாடப்படுகின்றது. இம்முறை இதன் தொனிப்பொருள் 'மாறிவரும் உலகில் கட்டிளமைப்பருவ உளநலம்' (Adolescent Mental health in a changing World). இதுவரை நீங்கள் வாசித்து உள்வாங்கிய விடயங்கள் உலகளவில் கட்டிளமைப்பருவ இளைஞர்கள், யுவதிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

**உளநல நாள் குறித்த உலக சுகாதார ஸ்தாபன அறிக்கை.**

ஆரம்ப வாலிப பருவம் ஆண், பெண் இருபாலாருக்கும் பொதுவானது. இவர்களின் உடல், உள, சமூக செயற்பாடுகளில் நிறையவே மாற்றத்தை ஏற்படுத்தும் காலம். பெற்றோரின் நேரடிக்கண்காணிப்பில் இதுவரை வீட்டில் ஒன்றாக வாழ்ந்த வாழ்க்கையில் இருந்து படிப்படியாக விடுபட்டு கல்லூரிகள், பல்கலைக்கழகம், வேலைவாய்ப்பு, தொழில், புலம்பெயர்வு என சுயாதீனமாக இயங்க ஆரம்பிக்கின்ற ஆரம்ப காலமாகவும் இது அமைகின்றது. நெருக்கீடுகள், மன உளைச்சல்கள், ஒவ்வின்மை, போதிய தொடர்பாடல் இன்மை போன்ற பல்வேறு பிரச்சினைகளை புதிய இடங்களில் இவ்வயதினர் எதிர்கொள்ள நேரிடும் காலமாகவும் இவ்வயது அமைகிறது. இந்த சந்தர்பங்களில் போதிய ஆறுதல்-ஆற்றுப்படுத்தல், தீர்வுகள் கிடைக்காதபோது அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் உளநல கோளாறுகளாக வெளிக்காட்டப்படலாம். மாறிவரும் உலகில் இணையம், இணைய வழி தொடர்புகள் பல வழிகளில் நன்மைகளை ஏற்படுத்தியபோதும் அவற்றை சரியாக பயன்படுத்தாத சந்தர்ப்பங்களில் கட்டிளமைப்பருவத்தினரின் பிரச்சனைகளுக்கு மூலகாரணமாகவும் அவை அமைகின்றன.

பெரும்பாலான கட்டிளமைப்பருவத்தினர் பல்வேறு நாடுகள், பிரதேசங்களில் மனிதனால் மேற்கொள்ளப்படுகின்ற அனத்தங்களாலும், இயற்கை அனத்தங்களிலும், பரவிவருகின்ற கொள்ளைநோய்களினாலும் பல்வேறு விதமாக உள நெருக்கீடுகளுக்கும், உளநல கோளாறுகளுக்கும் முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

ஐம்பது சதவீதமான உளநோய்களின் ஆரம்பம், பதின்நான்கு வயதிற்கு முன்னரே ஆரம்பமாகின்றது. ஆனால் பெரும்பாலான உளநல கோளாறுகள் சரியான நேரத்தில் இனங்காணப்பட்டு பொருத்தமான இடையீடுகளுக்கு உட்படுத்தப்படுவதில்லை.

கட்டிளமைப்பருவ உளநல கோளாறுகளில் உளச்சோர்வு நோய் மூன்றாவது இடத்திலும், தற்கொலை மரணம் 15 – 29 வயதினரில் இரண்டாவதாகவும், அத்துடன் பிரச்சனைக்குரிய மதுபாவனை, போதைப்பொருள் உட்கொள்ளுதல் முதலாவது தீவிர பிரச்சனையாகவும் இனங்காணப்பட்டுள்ளது. இவை பாதுகாப்பற்ற உடலுறவு, அபாயகரமான வாகன ஓட்டுதல், தனிநபர் வன்முறை போன்ற துணைப்பிரச்சினைகளையும் ஏறபடுத்துகின்றன. ஆரோக்கியமான உடல், உள மேம்பாட்டுடன் கூடிய ஒட்டுமொத்த நலன் கட்டிளமைப்பருவ வயதில் தேவைப்படுகிறது. உள்நாட்டு யுத்தம், இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட நாடுகளில் இவை இன்னும் அதிகமாகவே தேவைப்படுகின்றன. சரியான வழிகாட்டல், ஆலோசனைகளை புரிந்துகொண்டு ஒத்துணர்வுடன் உதவிசெய்யும் பெற்றோர், ஆசிரியர்கள், சுகாதாரத் துறையினர், அதிகாரிகள் என எம்மில் நிறைய மாற்றமும் தேவைப்படுகிறது. அப்போது இளைஞர்கள், யுவதிகள் பிரச்சனைகளுக்கு முகங்கொடுத்து ஆரோக்கியமாக விரைவாக மீளெழும் நிலை இயல்பாக ஏற்படும்.

**வருமுன்காத்தல் - நல்ல புரிந்துணர்வின் அடித்தளம்**

உளநெருக்கீடுகள், உளநலக்கோளாறுகள் உளநலக்கேடுகளில் இருந்து தற்துணிவுடன் மீளெழும் பக்குவம் கட்டிளமைப்பருவத்தில் ஏற்பட அவர்களை

டாக்டர். பி. யூடி ரமேஸ் ஜெயக்குமார்
உளநல மருத்துவர்
வாழைச்சேனை மருத்துவமனை

முழுமையாக புரிந்துகொண்டு அவர்களது பிரச்சினைகளில் ஆக்கபூர்வமாக உதவி செய்வதன் ஊடாக மேலெழும்ப முடியும். இங்கு வீட்டில் பெற்றோரும், பாடசாலையில் ஆசிரியர்களும் கட்டிளமைப்பருவத்தினருக்கு பயனுடைய பங்காளிகளாக மாறவேண்டும். பரீட்சித்துப்பார்த்தல் என்பது இவ்வயதில் மிகப்பொதுவானது. எனவே நாங்கள் முன்கூட்டியே இவற்றை எதிர்வுகூறக்கூடிய, எதிர்கொள்ளக்கூடிய பக்குவத்தை பெற்றிருத்தல் வருமுன் காப்பதற்கு மட்டுமல்ல பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆகிய நாமும் விபரீதங்கள் நடக்கும்போது மனவுறுதியுடன் விலகிய தண்டவாளத்தில் மீண்டும் தூக்கி நிறுத்தி ஓடவிடும் ரயில் போல அவர்களையும் நேராக அடையவேண்டிய இலக்கை நோக்கி முன்னகர்த்த முடியும். இன்னும் நாம் எமது பண்பாடு, கலாச்சாரம், மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ? என்ற பயத்தில் கட்டிளமைப்பருவ எமது பிள்ளைகளுடன் சில பொதுவான விடையங்களை பேசமறுக்கிறோம் அல்லது அவர்களது விருப்பங்கள், ஆசைகளை விளங்கிக்கொண்டு. உதவ முடியாத கையறு நிலை காணப்படுகின்றது.

நாம் பேச மறுத்த விடையங்களை தற்போதைய இலத்திரனியல் சாதனங்கள், சமூக வலைத்தளங்;கள் இவற்றின் தொடர்புகள் மிக விரைவாக சொல்லிக்கொடுக்கின்றன. கட்டிளமைப்பருவ வயதில் ஏற்படும் பாலியல் தேவைகள், பாலியல் நடத்தைகள், காதல்வயப்படுதல், மது, போதைப்பொருள் பாவனை, புகைத்தல், அதிக இணைய பாவனை, உடலில் பச்சைகுத்துதல், சைபர் குற்றங்கள் இவை போன்றவை, வீட்டில் பெற்றோரும், பாடசாலையில் ஆசிரியர்களும் தமது கட்டிளமைப்பருவ வயதினருடன் வெளிப்படையாக கதைப்பதற்கு, விவாதிப்பதற்கு, அவர்களிடமுள்ள சந்தேகங்களை சரியாக அறிந்து தீர்த்துவைப்பத்கு உதவவேண்டும். பாடத்திட்டம் முடிந்து பரீட்சைக்கு ஆயத்தப்படுத்துவதற்கு மேல் இவை மேலானது. இன்றைய காலத்திற்கு தேவையானது. அல்லாது போனால் யுத்தத்தின்போது இழந்த கட்டிளமைப்பருவத்தினரை விட அதிகமாக தற்கொலை, கொலை, வீதி விபத்துக்கள், ஏனைய விபத்துக்களில் இழக்க நேரிடும். - - - எச்சரிக்கை.



**பாலியல் கல்வி.**

பாடசாலைகளில் மாணவர்களின் பாலியற்கல்வி இன்றும் ஆரம்பநிலையிலேயே உள்ளது. மேற்கத்தைய நாடுகளில் இவை ஆண்டு ஒன்று முதல் ஒவ்வொரு வகுப்பேற்றத்துடன் மாணவர்களுக்கு போதிக்கப்படும் மிகப்பிரதான பாடமாக அமைகிறது. காலத்திற்கு ஏற்றாற்போல பாலியற் கல்வி ஃ இனப்பெருக்க சுகாதாரம் மணவர்களுக்கு சரியான முறையில் சொல்லிக்கொடுப்பதன் ஊடாக இளவயது திருமணம், திருமணமாகாமல் கற்பம் தரித்தல், காதலிக்கும் காலத்தில் செய்யக்கூடிய, செய்யக்கூடாத விடயங்கள், கர்ப்பத் தவிர்ப்பு முறைகள், அவசரகர்ப்பதவிர்ப்பு முறைகள் என்பவற்றை அறிவதன் மூலம் பிரச்சனைகளுக்கு முகங்கொடுப்போர் அவற்றிலிருந்து மீழும் முறையையும் சரியான நேரத்தில் பிரயேகிக்க உதவியாக இருக்கும். இங்கு எமது கலாச்சாரம், பண்பாடு, விழுமியங்கள் என சிலவற்றை முன்நிலைப்படுத்தி வாழ்வது இனிவரும் காலத்திற்கு பொருத்தமா? என ஆக்கபூர்வமாக வாதிடுவது, மாற்றங்களை கொண்டுவருவதும் எமது பொறுப்பாகும். மேற்கத்தைய பெற்றோர் போல ஒருசில விடையங்களிலாவது எமது கட்டிளமைப்பருவ பிள்ளைகளுடன் மனம் திறந்து கதைத்து சொல்லிக் கொடுப்பதன் ஊடாக 'செங்கலடி சம்பவங்கள்' போன்ற துர்பாக்கிய நிலமைகளை எதிர் காலத்தில் தவிர்பதற்கு உதவியாக இருக்கும். சமுத்திரக்கனியின் 'அப்பா' (திரைப்படம்) தந்தை தனது தனயனிற்கு எவற்றை எந்தவயதில் சொல்லிக்கொடுக்கவேண்டும் என்ற பேசப்படாத பொருளை பேசவைக்கும் கதையாக அமைகிறது. 'குற்றம் கடிதல்' படத்தில் 'இனப்பெருக்கக் கல்வியை' எவ்வாறு வகுப்பறையில் ஒரு ஆசிரியர் சொல்லிக்கொடுக்க வேண்டும் என்ற முறை ஓரளவு தெளிவு படுத்துகின்றது.

தாம் எண்ணும் விதமாக உளநலத்துறையை பார்க்காமல் அல்லது பொதுவாக சொல்லிக்கொள்கிற விசர், பயித்தியம் இதுதானே உளநலம் என்ற மனநிலையிலிருந்து மாற்றத்தை கொண்டு வாருங்கள். கட்டிளமைப்பருவத்தினருக்கு உருவாக்கிய சேவை மையங்களை மீண்டும் இயக்கத்திற்கு கொண்டுவர உங்கள் மனச்சாட்சியின் கதவுகளை திறந்து விடுங்கள். யாழ்ப்பாணம் சென் யோண்ஸ் கல்லூரியின் அதிபரான அமரர் ஆனந்தராசா நினைவுப்பேருரை மூன்றாம் திகதி ஐப்பசி 2015 அன்று பேராசிரியர் தயா சோமசுந்தரம் நிகழ்த்திய நினைவுப் பேருரையிலிருந்து...... 'வழிதவறிப்போன இளைஞர் தலைமுறை'

இளைஞர்கள் பயன்படாதவர்கள் அல்லர் அவர்கள் பயன்படுத்தப்படாதவர்கள் என்ற அப்துல்கலாமின் கருத்து இக்காலத்திற்கு பொருத்தமானதாகும். அண்மையில் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட உள்நாட்டு யுத்தம் காரணமாக சமூகத்தின் மலரும் பூக்களான இளைஞர் யுவதிகளில் பலர் கொல்லப்பட்டார்கள். சிலர் தாங்களாக உயிர்த்தியாகம் செய்தார்கள், செய்யவைக்கப்பட்டார்கள். சுதந்திரம் மற்றும் சிறந்த சமூக ஒழுக்கங்களை ஏற்படுத்துவது போன்ற அக்கறைகளில் இளைஞர்கள் பலரை போராளிகளாக சேர ஊக்குவிப்பதற்கும் அரச வன்முறைகள், இராணுவத்தின் அடக்கு முறைகள், தமிழருக்கு எதிரான பாகுபாடுகள், பல்கலைக்கழக அனுமதியில், குறிப்பாக காட்டப்பட்ட தரப்படுத்துதல் போன்றன மாணவர்களையும், இளைஞர்களையும் ஆயுத அமைப்புக்களுடன் சேர்வதற்கு முன்தள்ளியது.

இயக்கத்தின் பிரசாரம், மற்றும் தமிழர், தம் தனித்துவம் பற்றிய இன உணர்வுகள், தாய்நாடு, இரத்தம், துணிகரமான செயல் போன்றவை இளைஞர்களை போராளியாக இணைவதற்கு வழிவகுத்தன. இந்நிலையில் இன்னோரு தொகுதி இழைஞர்கள் இக்கட்டான பிரயாணங்கள், பல கண்டங்களினூடாக, கடல்களுக்கு ஊடாக ஆட்டம் காணும் படகுகளினூடாக வட ஐரோப்பாவின் உறைபனி, காடுகளின் ஊடாக, தென்கிழக்காசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க சிறைகளில் வாடி சர்வதேச எல்லைகளை கொள்கலங்களின் உள்ளேயும், பெரும்பார ஊர்திகளுக்கு அடியிலும் பயணம் செய்து அகதிகளாக புகலிடம் பெற்றனர். இதன் விளைவாக உலகளாவிய ரீதியில் 'புலம் பெயர் தமிழர்' தோன்றினர்.

ஆயினும் இன்றோ இத்தகைய வரலாற்றினையும், அளவில்லா அர்ப்பணிப்புகளையும், தியாகங்களையும், இழப்புகளையும் மறந்து எமது சமுதாயம் அதன் வழமையான பாணியில் குறை சொல்லி, பிழை சொல்லி, விமர்சித்து வருகின்றது. இதனால் எமது வாழ்வின்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

தொடர்ச்சி...

## கடினமான பிரச்சினைக்கு இலகுவான தீர்வு

ஏற்றுக்கொள்ளாமல் விடுதல், தொழில்வாய்ப்பை இழக்கச் செய்தல், தொழில்துறையை கைப்பற்றுதல், தேசிய அடையாள அட்டை மூலம் பேதப்படுத்துதல், காணி உரிமை போன்றன மட்டுமின்றி கலாசார திசைமாற்றம் என அத்தனை வழிகளிலும் மலையகத் தமிழர்களை திசை திருப்பிவிட்ட சிறிமா - சாஸ்திரி உடன்படிக்கையை மேற்கொண்ட சிறிமா அம்மையாரை சிங்கள சமூகமும் ஊடகங்களும் கடினமான பிரச்சினைக்கு இலகுவான தீர்வை கண்ட சாதனைப் பெண்மணியாக பார்க்கின்றன.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் ஒரு பகுதியாக நிறுவப்பட்டுள்ள சிறிமா பண்டார நாங்க அருங்காட்சியகத்தில் அவரது வாழ்க்கைக் குறிப்புகள் நிழற்படங்களுடன் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அதில், அவர் மேற்கொண்ட சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் தொடர்பாக பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. 'நீண்ட காலமாக தீர்வு காணப்பட முடியாது இருந்து வந்த இந்திய வம்சாவளி தமிழ் தோட்டத் தொழிலாளர் பிரச்சினையை இரண்டு நாடுகளுக்கும் பாதிப்பில்லாது தீர்த்து வைத்தபோது', எனக் குறிப்பிட்டிருப்பதுடன் 'கடினமான பிரச்சினைக்கு இலகுவான தீர்வு' என தலைப்பிடப்பட்டிருப்பது ஆச்சரியமளிக்கின்றது.

மலையகத் தமிழ் மக்களின் இலங்கை அரசியல் வரலாற்றில் குடியுரிமை பறிப்பை விட பாரதூரமானது சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் ஆகும். அன்று பறிக்கப்பட்ட குடியுரிமையை இன்று மீளவும் பெற்றுக்கொள்ள கூடிய சந்தர்ப்பங்கள் அதே அரசியல் சூழலில் உருவாக்கியது. எனினும், சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் பிய்த்து எறியப்பட்ட லட்சக்கணக்கான உறவுகள் இன்றும் 'சிலோன் கொலனிகள்' எனும் பெயரிலான இடங்களில் இந்தியாவில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

அவர்களை இலங்கைக்கு மீளப்பெறுவது இப்போது இலகுவானதல்ல. அதனால் இழந்த மலையகத் தமிழர் சனத்தொகையின் அடர்த்தியும், இலங்கை அரசியலில் அவர்களின் வகிபாகமும் புரட்டிப்போடப்பட்டது இலகுவான விடயமல்ல. அவை கடினமானவையே. எனவேதான், கடினமான பிரச்சினைகளை இலகுவாக தீர்த்துவராக சிங்கள சமூகத்தின் மத்தியில் சிறிமாவோ பார்க்கப்படுகின்றார். எனினும், சிறிமாவுக்கு எதிரான மனிநிலை மலையக மக்கள் இடத்தில் இன்றும் மேலோங்கியிருப்பதன் பின்னணி இதுதான் என்பதை உணரக்கூடியதாகவுள்ளது. அதனை மூலதனமாக்கிக் கொண்ட ஐக்கிய தேசிய கட்சி மலையக தமிழ் மக்களை தமது அரசியல் இலாபத்துக்கான முதலீடாக மாற்றிக்கொண்டது வேறு கதை.

இந்த நிலையில் நாட்டுரிமை போராட்டத்தில் வெற்றிபெற்ற மலையக தமிழ் மக்கள், இலங்கையின் உள்நாட்டு நிர்வாகத்தில் எவ்வாறெல்லாம் விலக்கிவைக்கப்பட்டார்கள் அதில் இருந்து எவ்வாறு விடுபட்டு தங்களை உள்நாட்டு நிர்வாகத்தில் இணைத்துக்கொள்ள எடுத்த முயற்சிகள் என்ன? அவை வெற்றி பெற்றனவா என்பது பற்றி அடுத்துவரும் வாரங்களில் பார்க்கலாம்.

(தொடரும்)


தொடர்ச்சி...

## அம்பாறை மாவட்டத் தமிழர்கள் : (ஓர் அரசியல் வெட்டுமுகம்) பகுதி 22

பலகை மட்டுமே மாறியிருக்கிறது. தனது வீட்டின் முன் பெரிய அளவிலான உதய சூரியன் சின்னப் பதாகையை நிறுத்தி கட்சியின் நிறக் கடதாசிகளினால் பிரமாண்டமாகச் சோடித்துத் தேர்தல் பிரச்சாரத்தை முன்பே தொடங்கியிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி பட்டியலின் தலைமை வேட்பாளர் திரு. தயானந்தராஜா அவர்கள் தங்களது கட்சியின் வேட்பு மனு நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் நிராகரிக்கப் பெற்ற செய்தி வெளி வந்ததும் தனது வீட்டு முன்றலில் முன்பு நிறுத்தியிருந்த " உதய சூரியன் " பதாகையை இறக்கி விட்டுப் பதிலாக அந்த இடத்தில் யானைச் சின்னப் பதாகையை ஏற்றிப் பச்சை நிறக் கடதாசிகளினால் அலங்கரித்து யு. என். பி க்கு ஆதரவான பிரச்சாரத்தை ஆரம்பித்தார்.

இதனைக் கண்ட தமிழரசுக்கட்சியின் நீண்ட நாள் உறுப்பினரும், 1994 ஆம் ஆண்டுப் பொது தேர்தலின் போது மாவை சேனாதிராசாவின் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணிப் பட்டியலில் வேட்பாளர்களில் ஒருவராக இடம் பெற்றிருந்தவரும், அம்பாறைத் மாவட்டத் தமிழர் மகா சங்கத்தின் செயலாளரும், அக்கறைப் பற்றைச் சேர்ந்தவரும், 2000 ஆண்டுப் பொது தேர்தலில் இப்பத்தி எழுத்தாளரின் தலைமையிலான அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கச் சுயேச்சைக் குழுப் பட்டியலில் வேட்பாளராகப் போட்டியிட்டவருமான சிவஸ்ரீ சிவஞானசெல்வம் அவர்கள் அதிர்ச்சியும் ஆத்திரமும் அடைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைப் பீடத்திடம் குறிப்பாக அவர் நெருக்கமான உறவு கொண்டிருந்த மாவை சேனாதிராசாவிடம் அம்பாறைத் மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டியிட முடியாமற் போன நிலையில் மகா சங்கச் சுயேச்சைக் குழுவில் இடம்பெற்றிருந்த அம்பாறைத் மாவட்டத்தின் தமிழர் மகா சங்கப் பிரதிநிதிகளை ஆதரித்து வாக்களிக்கும் படி அம்பாறை மாவட்ட தமிழர்களைத் தமிழர் விடுதலைக் கூட்டணி கேட்டுக்கொள்ள வேண்டுமென்று வேண்டினார். ஆனால் அம்பாறைத் மாவட்டத் தமிழர்களுக்குச் சாத்தியமான ஒரேயொரு பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தையும் பறிபோய் விடாமால் தக்க வைப்பதற்கான இந் நியாயமான கோரிக்கை "செவிடன் காதில் ஊதிய சங்கு" ஆனது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிலைப்பாடு என்னவாக இருந்தது என்றால் அம்பாறை மாவட்டத் தமிழர்களுக்கு மூக்கு போனாலும் பரவாயில்லை; மகா சங்கத் சுயேச்சைக் குழுவுக்குத் தலைமை தாங்கிய இப்பத்தி எழுத்தாளரான தம்பியப்பா கோபால கிருஷ்ணனுக்குச் சகுனப் பிழையாக வேண்டும் என்றவாறு இருந்தது.

(தொடரும்)




தொடர்ச்சி...

## பாதையில் முதலைகளின் நடமாட்டம் அதிகரிப்பு: மக்கள் அச்சம்

பொத்துவில் ஆற்றில் இறங்கியபோது முதலைக் கடிக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

கடந்த வருடம் கைகழுவச் சென்றபோது பொத்துவில் பாணமையில் பிரித்தானிய ஊடகவியலாளர் ஒருவர் முதலையால் இழுத்துச் செல்லப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

போல் ஸ்டுவாட் மக்லன் (வயது 24) என்ற பிரித்தானிய ஊடகவியலாளரே இவ்வாறு முதலையால் இழுத்துச் செல்லப்பட்டிருந்தார்.

(காரைதீவு நிருபர் சகா)

தொடர்ச்சி...

## தரம் 5 பரீட்சை குழந்தைகளுக்கு வரமா, சாபமா?

மேல்பெற்றுள்ளனர். வலயத்தில் மொத்தமாக 43மாணவர்கள் மாவட்ட வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்றிருக்கின்ற அதேவேளை அம்பிளாந்துறை கனிஸ்ட வித்தியாலயத்திலே அதிகமான மாணவர்களான ஐவர் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல்பெற்று சாதித்திருக்கின்றனர். என்றான் மாதவன்.

சிறுவர்களுக்கான பரீட்சை, இப்பரீட்சையில் சாதித்த மாணவர்களது படங்கள் உள்ளடக்கிய பதாதைகள் பாடசாலையினால் காட்சிப்படுத்தக்கூடாது. அவ்வாறு காட்சிப்படுத்துவதன் மூலமாக மாணவர்கள் பாதிக்கப்படுவர் என்பதனை வலியுறுத்தி கல்வித் திணைக்களம் சுற்றுநிருபங்களை அனுப்பி இருக்கின்றது. இவ்வாறான சூழலில் மாணவர்களைப்பற்றி சீர்தூக்காவிட்டாலும் சமூகத்திற்காக சிறப்புக்களை வெளிக்காட்ட வேண்டியது படுவான்கரை போன்ற பிரதேசங்களுக்கு அவசியமானதொன்றாகவே தென்படுவதாக கூறிய மாதவன், அவ்விடத்தினைவிட்டு அகன்றான்.

தொடர்ச்சி...

## 'கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு' - புதிய அரசியல் கூட்டு ஆரம்பம்

அன்று தமிழ் கட்சிகளுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் மட்டக்களப்பில் கைச்சாத்திடப்படுவதுடன் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக தேர்தல் ஆணைக்குழுவிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படவுள்ளதாகவும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

தொடர்ச்சி...

## மாறிவரும் உலகில் கட்டிளமைப்பருவ உளநலம்

அர்த்தத்தை, குறிக்கோள்களை கண்டறிய தடுமாறி நிற்கும் இன்றைய இளைஞர்கள் பற்றி கதைக்கும்போது 'நாம், நாங்கள் இப்படி இல்லை இப்பத்தைய இளைஞர்கள் படுமோசம்' என்ற வார்த்தைகளைப் பொதுவாக பயன்படுத்துவதோடு அவர்களை விமர்சிப்பதும், அவர்களின் நடத்தைகள் பிழையெனச்சாடுவதும், அவர்களால் ஏற்படும் குழப்பங்களுக்கு என்ன செய்யலாம் என முன்மொழிவதும் எமக்கு வழக்கமாகி விட்டது. ஆனால் இத்தகைய வார்த்தைகளை, விமர்சனங்களை முன்வைக்கும் பொது இளைஞர்களின் கருத்தை நாங்கள் கேட்பதில்லை.

அவர்களால் ஏற்படும் குழப்பங்களுக்கு என்ன வெய்யலாம் என்று சிந்திக்கும் போது கூட சம்பந்தப்படும் இளைஞர்கள் அதில் பங்குபெறவைக்கப்படுவதில்லை. இந்நிலைக்கு மாற்றாக இளைஞர்களின் மனநிலையில் நின்று தற்கால சூழ்நிலையை இளைஞர்கள் எவ்வாறு நோக்குகின்றனர், அவர்கள் பார்வையில் அது எவ்வாறு பரினமித்து இருக்கிறது, அதனை அவர்கள் எவ்வாறு அனுபவித்து நிற்கின்றனர் என்பதையும், நிலவும் பிரச்சினைகளில் இருந்து அவர்கள் விடுபடுவதற்கான உத்திகளையும் அவர்கள் மூலமாக கண்டறிந்து செயற்படுத்துவதும் இன்றைய தலைமுறைக்கு பொருத்தமானது. . . .

தொடர்ச்சி...

## மூதாதையரின் காலடிகள்

செல்லும் மரபுகள்; திருகோணமலை கும்ப விழாவும் அத்தகையதே.

இத்தகைய கேள்விகளும் விடைகளும் இருந்தாலும் மூலத்தைத் தேடுதல் தொடர்ந்துகொண்டே இருக்கிறது.

கேரளாவில் நடைமுறையில் உள்ள சடங்குகளில் நாம் இந்த முறையிலான அமைப்பைக் காணலாம். தேயாட்டம், ஒட்டம் துள்ளல், பகவதி அம்மனுக்கு நடக்கும் சடங்குகள் நம் கும்ப சாயலைக் கொண்டுள்ளன.

ஒவ்வொரு பிரதேசமும் தமக்கான பண்பாட்டு மரபுகளை தமக்குள்ளாகவே உருவாக்குகின்றபோது வேறொரு பண்பாட்டிலிருந்து வருகின்றவைகளையும் உள்வாங்கிக்கொண்டு புதிய வடிவமாய் பரிணமிக்கின்றமையையும் உலக பண்பாட்டு வரலாறு உணர்த்தி நிற்கின்றது.

பொதுவாக, தென்னாசிய மரபுக் கலைகள் சடங்குகளின் அடிப்படையிலேயே உருவாகியிருக்கின்றன. கும்ப விழாவும் ஒரு சடங்காகவும் கலையாகவும் வெளிப்படுவதை நாம் காணலாம்.

தென்னாசிய மரபில் சடங்குகள் கலையோடு இணைந்தே பயில் நிலையில் உள்ளன. கும்பவிழா ஒன்பதுநாள் சடங்கும் அதனோடிணைந்து வருகின்ற பூசைகளும் சாமியாட்டமும் மனிதனின் நம்பிக்கையின் வழிவந்த கலையின் சங்கமிப்பே. (தொடரும்)

# புலம்பெயர் முதலீட்டாளர்களுக்கு அரிய வாய்ப்பு

மட்டக்களப்பில் ரியல் எஸ்டேட் மற்றும் நிர்மாணத் துறையில் முதலீடு செய்வதில் ஆர்முள்ள புலம்பெயர் உறவுகளுக்கு ஒரு வாய்ப்பு.

நம்பகமான இடத்தில், சொந்த ஊரில், முதலீடு செய்ய விரும்புபவர்களை மட்டுப்படுத்தப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட குடிசார் பொறியியல் நிர்மாணிப்பாளர்கள் கூட்டுறவுச் சங்கம் (Batticaloa District Civil Engineering Constructor's CO-OPERATIVE Society Limited ) வரவேற்கின்றது. இது ஒரு அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.

உங்கள் முதலீடுகளை சட்ட ரீதியான பாதுகாப்பான வழியில் உள்வாங்கி, உங்களோடு இணைந்து, லாபம் ஈட்டுவதற்கான வழிகளில் முதலீடு செய்ய அது உதவும்.

**உங்கள் வெற்றியே எங்கள் இலக்கு.**



**தொடர்புகளுக்கு**

N. Sunthareasan JP (WI) Dip in Civil Eng(Tech)
32/1 Thamaraikeny Road Batticaloa
Mail : east.lanka@yahoo.com
Phone : 009465 2222081 / 009477 2498123

## அரங்கம்
செய்திகள்

விளம்பரங்களுக்கு
இல : 227, பார் வீதி,
மட்டக்களப்பு.

arangamnews@gmail.com
071 399 9091

அரங்கம் பத்திரிகை
மட்டுநகரில் கிடைக்கும் இடம்

அரங்கம் முகவர்கள்

ARJUNA ADVERTISING
#19A, Baily Road, Arasady, Batticaloa.
Mob : 0777 222 489 / Tel&Fax : 065 222 6763 /mail: arjunaadds@gmail.com
Better Way For Better Life

EAST LINK
AGENCY POST OFFICE
NO : 196, Trinco Road,
Batticaloa.

## FCC SUPER MALL
4 Wings for Uplift Your life

ஒரே கூரையின் கீழ் வாழ்வின் அத்தியாவசிய பொருட் தேவையை பூர்த்தி செய்ய அன்புடன் வரவேற்கின்றோம்.

PHARMACY – TIP TOP HEALTH CARE
SUPER MARKET – CITY CENTRE
BUDGET SHOP – CASH & CARRY, Young Forever
CAFETERIA – FCC Cafe

இல.16, மத்திய வீதி, மட்டக்களப்பு.
TP: 0652222722,
Hotline: 0772072722

மட்டக்களப்பில் பால்மா வகைகளுக்கு அதியுயர் தள்ளுபடியை நாமே வழங்குகின்றோம்.

ஒரு பொருளுக்கு குறைத்து மற்றைய பொருளுக்கு அதிகரித்து விற்கும் விற்பனையிலிருந்து உங்களை நாம் பாதுகாக்கின்றோம்.

** நிபந்தனைக்குட்பட்டது
** Condition applies



### குழந்தைகளுக்கான பால்மா

| | | RETAIL PRICE | FCC PRICE | SAVE PRICE |
|---|---|---|---|---|
| ENFAGROW A+2 | 900g | 2820/= | 2600/= | 220/= |
| ENFAGROW A+3 | 850g | 2720/= | 2500/= | 220/= |
| ENFAGROW A+4 | 850g | 2620/= | 2400/= | 220/= |
| PEDIA SURE VANILA DELIGHT | 400g | 2250/= | 2050/= | 200/= |
| PEDIA SURE VANILA DELIGHT | 400g | 1490/= | 1340/= | 150/= |
| ENFA MAMA VENILA | 400g | 1520/= | 1420/= | 100/= |
| ENFAMIL A+2 | 400g | 1460/= | 1360/= | 100/= |
| ENFAGROW 3+ | 400g | 1410/= | 1310/= | 100/= |
| ENFAGROW A+ | 400g | 1360/= | 1260/= | 100/= |

### ஏனைய பால்மா வகைகள்

| | | RETAIL PRICE | FCC PRICE | SAVE PRICE |
|---|---|---|---|---|
| ANLENE LOW FAT | 400g | 470/= | 440/= | 30/= |
| RATTHI | 400g | 345/= | 330/= | 15/= |
| ANCHOR | 1kg | 860/= | 820/= | 40/= |
| MALIBAN KIRI | 1Kg | 860/= | 820/= | 40/= |
| LAKSPRAY | 1Kg | 860/= | 820/= | 40/= |
| RATTHI | 1Kg | 860/= | 820/= | 40/= |
| SUSTAGEN VENILA | 400g | 1850/= | 1695/= | 155/= |
| ENSURE | 400g | 1795/= | 1695/= | 100/= |
| ACTION VENILA | 400g | 1410/= | 1310/= | 100/= |